வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 22.08.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 255 | பக்கங்கள் : 16

# குருந்தூர்மலை பிரதேசம் தமிழர்களின் பூர்வீகமே!

## வடக்கு, கிழக்கு பிரதம சங்க நாயக்கர்

- புலிகள் பௌத்தத்தை மதித்து பாதுகாத்தனர்
- சிங்கள - பௌத்தர் வாழ்ந்தனர் என்பது முரண்!
- குருந்தூரை தொல். திணைக்களம் வசமாக்குக

வவுனியா, ஓகஸ்ட் 22

குருந்தூர்மலை தமிழர்களின் பூர்வீக நிலம். சிங்கள - பௌத்தர்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பது முரணானது. இங்கு தமிழ் பௌத்தர்கள் இப்பகுதியில் வாழ்ந்தனர் என்பதுவே உண்மை - என்று வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பிரதம சங்க நாயக்கர் சியம்ப லாகஸ்வெவ விமலசார நாயக்க தேரர் தெரிவித்துள்ளார். 11



பிரசித்திபெற்ற நல்லூர் கந்தன் ஆலயத்தில் நேற்று கொடியேற்றம் நடைபெற்றவேளை...!

## கிளிநொச்சி விபத்தில் ஆசிரியை உயிரிழப்பு

கிளிநொச்சி, ஓக. 22

கிளிநொச்சியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி படுகாயமடைந்த ஆசிரியை ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் உப அதிபரும் பிரபல தமிழ் ஆசிரியருமான ஜீவரஞ்சினி என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த ஆசிரியை தனது கணவருடன் மோட்டார் சைக்கிளில் வட்டக்கச்சி நோக்கி சென்று கொண்டிருந்துள்ளார். ஏ- 9 நெடுஞ்சாலையில் இருந்து காக்கா கடைச் சந்தியில் இருந்து வட்டக் கச்சிக்கு செல்லும் வீதியில் 11

## சமஷ்டி அரசியல் தீர்வையே தமிழரசு கட்சி முன்னெடுக்கும்!

### மட்டக்களப்பில் மாவை தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஓக. 22

இனப்பிரச்னையை தீர்ப்பதற்கு 13ஆவது திருத்த சட்டம் தமிழ் மக்களுக்கு முழுமையான தீர்வாக அமை யாது. சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டி அரசியல் தீர்வையே தமிழரசு கட்சி முன்னெடுக்கும். 11

## நல்லூர் கந்தனுக்கு நேற்று கொடியேற்றம்!

யாழ்ப்பாணம், ஓக. 22

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

பெருந்திரளான பக்தர்களின் அரோகரா கோஷத்துக்கு மத்தியில் சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் ஒலிக்க முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றம் நடைபெற்றது.

பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடனை 11

## சிறையில் பரவும் காய்ச்சல் கைதிகள் இருவர் மரணம்!

### ஐவர் மருத்துவமனையில்

கொழும்பு, ஓக. 22

காலி சிறைச்சாலையில் பரவிய மெனிங்கோகோகல் பற்றீரியா காய்ச்சலால் கைதிகள் இருவர் உயிரிழந்தனர்.

இதேநேரம், கைதிகள் ஐவர் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலை பேச்சாளர் தெரிவித்தார்.

சிறைக் கைதிகளிடையே மெனிங்கோகோகல் எனப்படும் பற்றீரியா காய்ச்சல் பரவுவதாக கராப்பிட்டி போதனா மருத்துவமனை மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மெனிங்கோகோகல் பற்றீரியா குழந்தைகளுக்கு அதிக தீங்கு விளைவிக்கிறது. எனினும், போதைப் பொருள் பாவனையால் உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு இது ஆபத்தானது - என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

## ஒக்ரோபர் வரை பெருமழை இல்லை!

கொழும்பு, ஓக. 22

ஒக்ரோபர் வரை பலத்த மழையை எதிர்பார்க்க முடியாது என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் (முன்கணிப்பு) ஷிரோமணி ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

வழக்கமாக ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் பலத்த மழை பெய்யும் என்றும் அவர் கூறினார்.

இந்த மாத இறுதியில் நாட்டின் காலநிலை நிலைமையை மீள்பகுப்பாய்வு செய்ய முடியும் என்று தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## 13ஐ நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ் கட்சிகள் ஒன்றாகவேண்டும்!

### அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 22

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்த ஆதரவாக செயல்பட்டு வரும் நிலையில் கூப்பாடு போடாமல் அதனை நடை முறைப் படுத்த தமிழ் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தின் பயனாக இலங்கையில் அரசமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 11

## சிங்கள அரசியல்வாதிகளே மதவாதத்தை தூண்டுகின்றனர்

### சித்தார்த்தன் எம். பி.

யாழ்ப்பாணம்,ஓக. 22

சிங்களவர் மதம், மொழிப் பிரச்னையை தூக்காமல் விட்டிருந்தால் இந்த நாடு இப்படி இருந்திருக்காது. தென்னிலங்கை அரசியல்வாதிகள் மீண்டும் மதப் பிரச்னையைத் தூக்கியுள்ளனர். இது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தப் போகின்றது.

இவ்வாறு கூறியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் 11

## 5,000 மருத்துவர்கள் வெளியேற தயார் தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுங்கள்!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஓக. 22

சுகாதார அதிகாரிகள் குறைந்தபட்சம் வெளியேறவுள்ள 5 ஆயிரம் மருத்துவர்களை தக்க வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் விசேட மருத்துவர் ஹரித்த அளுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரச்னைகள் நெருக்கடிகளாக மாறும் வரையில் அதிகாரிகள் பொறுப்பில்லாமல் தூங்கிக் கொண்டிருந்தனர். வெளிநாடு சென்றுள்ள மருத்துவர்களின் சேவையை இரத்து செய்வதாகவும் அவர்களை கறுப்பு பட்டியலில் சேர்ப்பதாகவும் பேசும் சுகாதார அமைச்சின் பணிப்பாளர்கள் இது தொடர்பில் 11

## இப்படியும் நடக்கிறது

கடந்த பதினைந்தாம் திகதி பிரிட்டனின் பிரபலமான தொலைக்காட்சியான சனல் - 4 தொலைக்காட்சி இலங்கையில் நடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஓர் ஆவணப் படத்தை வெளியிடவிருப்பதாக அறிவித்திருந்தது.

அதன் நிகழ்ச்சிகள் பற்றிய விளம்பரங்கள் வழக்கமாக தொலைக்காட்சிகளின் நிகழ்ச்சிகளை வெளியிடும் சஞ்சிகைகளிலும் வெளிவந்திருந்தன.

தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட மூவரின் நேரடி சாட்சியங்களுடன் அந்த ஆவணப்படம் வெளியிடப்படவிருப்பதாக கூறின அந்த விளம்பரங்கள்.

ஏற்கனவே, இலங்கையில் நடந்த இறுதிக்கட்ட போர் தொடர்பான ஆவணப்படத்தை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருந்த அந்தத் தொலைக்காட்சி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாகவும் ஆவணப்படம் வெளியிடுகின்றது என்றதும் அனைவரின் கவனமும் அதன்மீது திரும்பியிருந்தது.

ஆனால், குறிப்பிட்ட தினத்தில் அந்த ஆவணப்படம் வெளியிடப்படவில்லை.

இதுகுறித்து ஆராய்ந்தபோதுதான் 'சம்பவங்கள்' பல தெரிய வந்தன.

கிழக்கு அரசியலில் இன்று பிள்ளையான் தவிர்க்க முடியாத ஒருவராக வளர்ந்துவிட்டபோதிலும் அவர் தொடர்பாக அவ்வப்போது சர்ச்சைக்குரிய தகவல்களும் வெளிவந்தவண்ணமே இருக்கின்றன.

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து கருணா பிரிந்து வந்தபோது அவருடன் வந்தவர் பிள்ளையான். கருணா பிரிந்து வந்து அரசியல் கட்சியை ஆரம்பிக்க முயன்றபோது அதற்கு உதவியவர்கள் பலர். கருணாவுக்கு அப்போது ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டபோது அவருக்கு உதவியவர் டக்ளஸ் தேவானந்தா. தன்னுடனிருந்த கிழக்கு மாகாணத்து முஸ்லிம் இளைஞர் ஒருவரை கருணாவுடன் பணியாற்ற உதவினார் டக்ளஸ்.

தமிழ் இளைஞர்கள் தமிழீழத்துக்காக ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தபோது தமிழ் இளைஞர்கள் மாத்திரமன்றி, மலையக தமிழ் இளைஞர்கள், முஸ்லிம் இளைஞர்கள், ஏன் ஒரு சில சிங்கள இளைஞர்களும் தமிழர்களின் போராட்டத்திலுள்ள நியாயங்களைப் புரிந்துகொண்டு அந்த இயக்கங்களோடு சேர்ந்து இயங்கினர். அவ்வாறு இயங்கிய முஸ்லிம் போராளிகளில் ஒருவர் மிகிலார். ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தில் இணைந்து போராடிய அவர், அதன் தலைவர் பத்மநாபா உட்பட பலர் சென்னையில் படுகொலை செய்யப்பட்டபோது அவரும் படுகொலை செய்யப்பட்டார். அவர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் அவரின் புதல்வர் அசாத் மௌலானாவை, பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புவரை படிக்க உதவியவர் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினூடாக போராட்ட வாழ்வுக்கு வந்த டக்ளஸ் தேவானந்தா.

கருணாவின் மொழிபெயர்ப்பு தேவைக்காக அவருடன் பணியாற்ற நியமிக்கப்பட்ட அசாத் மௌலானா, பின்னர் கருணாவிடமிருந்து பிரிந்து பிள்ளையானின் முக்கிய உதவியாளராக மாறியிருந்தார். பிள்ளையானின் நிழலாக பல ஆண்டுகள் இருந்த அவர் சில மாதங்களுக்கு முன்னர் சுவிஸ் நாட்டுக்கு புலம்பெயர்ந்து சென்றிருந்தார். அங்கு ஐ. நா. மனித உரிமைக் குழுவில் பிள்ளையானுக்கு எதிராக நீண்ட சாட்சியம் ஒன்றை வழங்கிய அவர், அதனால் பரபரப்பாக பேசப்பட்டவர்.

அவரது வாக்குமூலத்தை வைத்தே சனல் 4 இந்த ஆவணப் படத்தை வெளியிடவிருந்ததாம். ஐ. நா. மனிதஉரிமைகள் பேரவையில் அவரது வாக்குமூலத்தை நண்பர் ஒருவர் அனுப்பியிருந்தார். இருபது பக்கங்களுக்கும் மேற்பட்ட அந்த வாக்குமூலத்தில் அவர் பிள்ளையானை ஒரு மிக மோசமான மனிதராக சித்திரித்திருந்தார். ஒரு சில நாட்களல்ல, பதினைந்து வருடங்களாக அவருடனேயே நல்லது - கெட்டது எல்லாவற்றிலும் பங்குகொண்டிருந்தவர் இந்த மௌலானா. பிள்ளையான் சிறையில் இருந்தபோதுகூட அவரை வாராவாரம் சந்தித்து, அவரது கட்சிப் பணிகளை தொடர உதவியவர். இப்போது திடீரென்று அவர்பற்றி இவ்வாறு கூறுவது, அவரை யார் என்று அறியவே உதவியிருக்கும் என்பது தெரிந்ததுதான்.

ஆனால் அவரது வாக்குமூலத்தை முழுமையாக நம்பிக்கொண்டு, அதனை ஆவணப்படமாகத் தயாரித்து வெளியிடவிருந்த சனல் 4 தொலைக்காட்சிதான் இப்போது விழிபிதுங்கி நிற்கின்றது என்று அறியவருகின்றது.

ஒரு குறிப்பிட்ட ஆண்டில், ஒரு தினத்தில், தான் பிள்ளையானால் புத்தளத்துக்கு அனுப்பப்பட்டதாகவும், அங்கு வைத்து இலங்கையின் புலனாய்வு அதிகாரி ஒருவருக்கு சஹ்ரானையும் ஆறு தற்கொலைப் போராளிகளையும் தானே அறிமுகம் செய்து வைத்ததாகவும் சொல்லியிருக்கிறார் அந்த மௌலானா. ஆனால், அந்த ஆவணப்படத்தை வெளியிடுவதற்கு முன்னர் சில தரப்புகளிடம் அதுகுறித்து கருத்துக் கேட்க முயன்றபோதுதான் சனல் 4க்கு தெரியவந்திருக்கின்றது, அந்த குறிப்பிட்ட அதிகாரி, மௌலானா குறிப்பிட்ட அந்தக் காலத்தில் மட்டுமல்ல, அதற்கு ஒரு வருடத்துக்கு முன்னதாகவே மலேசியாவில் உள்ள இலங்கை தூதரகத்தில் ஒரு தூதரக அதிகாரியாக பணியாற்றிக் கொண்டிருந்திருக்கிறார். மலேசியாவில் அவர் பணியாற்றிய மூன்றாண்டு காலத்தில் அவர் இலங்கைக்கு வரவே இல்லையாம்.

இத்தகைய 'அறிவாளிகளை' தன்னுடன் வைத்துக்கொண்டுதான், பிள்ளையான் கிழக்கு மாகாணத்தில் ஆட்சி செய்திருக்கிறார். நல்ல காலம் நஷ்டஈடு கோரும் வழக்கிலிருந்து தப்பினோம் என்று சனல் 4 சந்தோசப்படலாம்.

**- ஊர்க்குருவி.**






வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்த சுவாமி ஆலய கொடியேற்றத் திருவிழா நேற்று நடைபெற்றபோது....!

(படங்கள் - ஐ. சிவசாந்தன்)

## குப்பையில் போடப்பட்ட நகைகளை மீட்டு உரியவரிடம் வழங்கிய சுகாதார ஊழியர்!

### சாவகச்சேரி நகர சபை முன்மாதிரி செயல்

சாவகச்சேரி, ஓக. 22

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் மண்டுவில் வட்டாரத்தில் வசிப்பவர் வீதியில் குப்பைகளோடு தவறுதலாக வீசிய 8 பவுண் நகைகளை நகராட்சி மன்ற குப்பை மேட்டிலிருந்து மீட்ட ஊழியர்கள், அவற்றை உரிமையாளரிடம் ஒப்படைத்தனர். இந்த சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

நகைகளை தொலைத்த வர் திருடர் பயத்தால் பழைய துணி ஒன்றில் கட்டி வைத்துள்ளார். இந்நிலை யில் வீட்டை சுத்தம் செய்தபோது நகைகள் இருந்த துணி முடிச்சையும் குப்பை களுடன் தவறுதலாக போட்டுள்ளார்.

இந்தக் குப்பைகளை சேக ரித்த நகராட்சி மன்ற ட்ராக்டர் குப்பைகளை தரம் பிரிக் கும் இடத்துக்கு கொண்டு சென்றுள்ளது.

இந்நிலையில், துணியில் கட்டப்பட்டிருந்த நகைகள் காணாமல் போனதை உணர்ந்த வீட்டின் உரிமையாளர் இந்த விடயம் குறித்து சாவகச்சேரி நகராட்சி மன்றத்துக்கு சென்று பிரதம நிர்வாக அதிகாரி செ. அனுசியாவிடம் தெரியப்படுத்தியுள்ளார்.

இதையடுத்து உடனடி யாக செயல்பட்ட நகராட்சி மன்ற நிர்வாக அதிகாரி மற்றும் நகராட்சி மன்ற சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர்களான பா. தயாகரன், பா. நிஷாந்தன் ஆகியோர் நகராட்சி மன்ற கழிவு சேகரிக்கும் இடத்தில் ஊழியர்கள் மூலம் தேடுதலை நடத்தினர்.

இந்த நகைகளை சுகாதார தொழிலாளியான சண்முகம் தமிழ்சன் மீட்டு நிர்வாக அதிகாரிகள் ஊடாக உரிமையாளரிடம் கையளித்தார்.

சாவகச்சேரி நகராட்சி மன்ற சுகாதார பகுதியினரின் நேர்மையான - விரைவான இந்த செயலை அனைவரும் பாராட்டி வருகின்றனர். (ஐ)

## நல்லூரில் பிரபல உணவகத்தில் பால் தேநீரின் விலை 200 ரூபாய்!

யாழ்ப்பாணம், ஓக. 22

நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பகுதியில் உள்ள சைவ உணவகம் ஒன்றில் ஒரு கோப்பை பால் தேநீர் 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக மக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள திருநெல்வேலியில் அமைந்துள்ள




பிரபல உணவகம் ஒன்றின் கிளையிலே இவ்வாறு அதிக விலையில் பால் தேநீர் விற்பனை செய்யப்படுகின்றது என்று கூறப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடி காலத்தில் பொருட்களின் விலைகள் சடுதியாக உயர்ந்த போதுகூட இவ்வாறு அதிக விலைக்கு பால் தேநீர் விற்பனை செய்யப்பட வில்லை என்றும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இது விடயத்தில் உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ-03)

## சண்டிலிப்பாயில் வன்முறை குழு அடாவடி!

யாழ்ப்பாணம், ஓக. 22

சண்டிலிப்பாயில் வீடொன்றுக்குள் நுழைந்த வன்முறை கும்பல் மோட்டார் சைக்கிள்களுக்கு தீ வைத்ததுடன், வீட்டுக்குள் இருந்த உடைமைகளுக்கும் தீ வைத்து சென்றுள்ளது.

வீட்டார் வெளியூர் சென்றிருந்த சமயம் வீட்டில் மகன் மட்டுமே இரவு இருந்துள்ளார். அந்தக் குழு வீட்டுக்குள் நுழைவதை அவதானித்த அவர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

இந்நிலையிலேயே வீட்டுக்குள் புகுந்த குழு இரண்டு மோட்டார் சைக்கிள்களை தீயிட்டு கொளுத்தியதுடன் , வீட்டில் இருந்த உடைமைகளையும் அடித்து நொறுக்கி தீ வைத்து விட்டு சென்றுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் சுமார் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துகள் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## நல்லூர் மூத்த விநாயகர் கும்பாபிஷேகம்!

யாழ்ப்பாணம், ஓக. 22

நல்லூர் மூத்த விநாயகர் கோயில் பஞ்சதள இராஜ கோபுர மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 6 மணியளவில் நடைபெறவுள்ளது.

நேற்று திங்கட்கிழமை காலை 6.05 மணிக்கு கர்மாரம்ப கிரியைகள் ஆரம்பமாகின.

சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து கிரியைகளை நடத்திவருகிறார்.

ஈழநாடு
Eelanadu
22.08.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 5

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தென்பகுதியின் அரசியல் மோதல்

ரணில் ஆளும் வர்க்கத்தின் இறுதி துடுப்பாட்ட வீரர் - அவரை அகற்றவேண்டுமென்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்திருக்கின்றார். இதேவேளை, டலஸ் அழகப்பெரும அணியினர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்திருக்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியும் ஒரு பலமான கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. ரணில் விக்கிரமசிங்க எதனை நோக்கிச் செல்கின்றார் - அவருடன் யாரெல்லாம் கூட்டுக்குத் தயாராக இருக்கின்றனர் என்பதை இப்போதைக்குத் தெளிவாக ஊகிக்க முடியாது - ஆனால், அவர் மொட்டு அணியுடன்தான் இப்போதும் ஏதோவொரு வகையில் இணைந்து பயணித்துக் கொண்டிருக்கின்றார். இவ்வாறானதொரு சூழலில் ராஜபக்ஷ சகோதரர்களும் தங்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

விடயங்களை ஆழமாக நோக்கினால் தென்பகுதியின் பிரதான கட்சிகள் மத்தியில் ஓர் அரசியல் மோதல் இடம்பெற்றுவருவதை காணலாம். இந்த மோதல் பெருமளவுக்கு இரகசியமாகவே இடம்பெறுவது போல் தெரிகின்றது. இந்த மோதலில் புதிய கூட்டணிகளை ஏற்படுத்திக் கொள்வதிலும் கட்சிகளில் அதிருப்தியுடன் இருக்கும் செல்வாக்குள்ள தனிநபர்களை இலக்கு வைத்தும் பல்வேறு நகர்வுகள் இடம்பெற்றுவருவதான தோற்றம் தெரிகின்றது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், தற்போதைய சூழலில் ஜனாதிபதித் தேர்தல் மும்முனை போட்டிக்கானதாகவே தெரிகின்றது. எனினும், அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில்தான் தென்பகுதியின் அரசியல் மோதல் வெளியில் தெரியும். ஆனால், நிலைமைகள் ரணில் எதிர்பார்ப்பது போன்று இலகுவாக இருக்குமா என்பதிலும் சந்தேகங்கள் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் இலகுவாக இருப்பதான ஒரு தோற்றம் தெரிந்தது. ஆனால் தற்போது, சிங்கள தேசியவாத சக்திகள் மீளவும் தங்களை ஒருங்கிணைத்து வருகின்றன. இதற்கான வாய்ப்பை வழங்கியதிலும் ரணிலுக்கு பங்குண்டு.

ஏனெனில், 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக ரணிலின் அறிவிப்பைத் தொடர்ந்தே அதுவரையில் எவ்வாறு மீளவும் ஒருங்கிணைவது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்த சிங்கள - பௌத்த கடும்போக்கு தரப்புகள், தற்போது தமிழர்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கக்கூடாதென்னும் சுலோகத்துடன் வீதிக்கு வந்திருக்கின்றன. தமிழ் மக்களின் ஆதரவைப் பெறும் நோக்கில் ரணில் முன்வைத்த விடயமொன்று அவருக்கு எதிராகத் திரும்பியிருக்கின்றதா அல்லது ரணில் இந்த நிலைமையை எதிர்பார்த்திருந்தாரா? அவ்வாறு விடயத்தை அறிந்துகொண்டுதான் ரணில் இதனை செய்திருக்கின்றார் என்றால், இதனால் ரணில் அடையப் போகும் நன்மை என்ன? வேறு வழியில்லாமல் தமிழ், முஸ்லிம் மற்றும் மலையக மக்கள் தனக்குத்தான் வாக்களிப்பார்களென்று அவர் கருதுகின்றாரா?

தென்னிலங்கையின் அரசியல் மோதல் தொடர்பில் தமிழ் தரப்புகள் எவ்வாறான பார்வையை கொண்டிருக்கின்றன. இந்தச் சூழலை, தமிழ் மக்களுக்கு சாதகமான வகையில் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள முடியும்? இது தொடர்பில் தமிழ் கட்சிகள் தங்களைத் தயார் செய்திருக்கின்றனவா? அல்லது வழமைபோல் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர்தான் நித்திரையிலிருந்து எழுவார்களா? உண்மையில், அடுத்த ஜனாதிபதி தேர்தல் தமிழர்களுக்கான பேரம் பேசும் அரசியலுக்கான துருப்புச்சீட்டாக இருக்கும். ஆனால், பயன்படுத்தினால் மட்டும்தான் அதற்கு பெயர் துருப்புச் சீட்டு.





வரலாற்று பெருமைமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் புதிய சப்பை ரதம் வெள்ளோட்டமும் வைரவர் உற்சவமும் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றபோது....!
(படங்கள் - ஐ. சிவசாந்தன்)

# நாட்டின் பணவீக்கம் 4.6 வீதமாக குறைந்தது!

கொழும்பு, ஓக. 22

வருடாந்த அடிப்படையில் தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டால் அளவிடப்படும் ஒட்டுமொத்த பணவீக்க விகிதம் கடந்த ஜூனில் 10.8 வீதத்திலிருந்து ஜூலையில் 4.6 வீதமாகக் குறைந்துள்ளது.

ஜூலை மாதத்துக்கான அனைத்து பொருட்களுக்கான என். சி. பி. ஐ. 201.9 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. இது ஜூன் மாதத்துடன் ஒப்பிடும்போது 1.4 குறியீட்டு புள்ளிகள் குறைவு.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம் ஓர் அறிக்கையில் ஜூலை 2022ஐ பொறுத்தமட்டில், 2023 ஜூலை மாதத்துக்கான பணவீக்கமானது முக்கியமாக உணவு மற்றும் உணவு அல்லாத குழுக்களில் நிலவும் அதிக விலையே காரணமாகும்.

ஜூன் மாதத்தில் உணவுப் பணவீக்கம் ஜூனில் 2.5 சதவீதத்தில் இருந்து -2.5 சதவீதமாக குறைந்துள்ளதாகவும், ஜூன் மாதத்தில் உணவு அல்லாத பணவீக்கம் 18.3 சதவீதத்தில் இருந்து 10.9 சதவீதமாகக் குறைந்துள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் ஒட்டுமொத்த பணவீக்கம் 2022 செப்ரெம்பரில் 73.3 சதவீதமாக உயர்ந்தது மற்றும் உணவு பணவீக்கம் 85.8 சதவீதமாக அதிகரித்துள்ளது.

எவ்வாறாயினும், அரசாங்கமும் மத்திய வங்கியும் எடுத்த கொள்கை முடிவுகளைத் தொடர்ந்து, கடந்த சில மாதங்களில் முக்கிய பணவீக்கம் கணிசமாகக் குறைந்துள்ளது. (ஐ)

# 4 கடவுச்சீட்டுகளுடன் பெண்ணொருவர் கைது!

கொழும்பு, ஓக. 22

நான்கு கடவுச்சீட்டுகளை வைத்திருந்த பெண் ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் சென்னையில் இருந்து அதிகாலை 4. 40 மணியளவில் விமான நிலையத்தில் தரையிறங்கிய பெண்ணை பொலிஸ் போதைப்பொருள் பிரிவு கைது செய்தது. இந்தியாவில் வாங்கிய தாகக்கூறி, நான்கு கடவுச்சீட்டுகளை சேலையில் மறைத்து வைத்திருந்தார் பொலிஸார் தெரிவித்தனர்.

உள்ளூர்வாசிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கு ஏற்பாடு செய்யும் கடத்தல்காரர்களிடம் ஒப்படைப்பதற்காக பெண் கடவுச்சீட்டுகளை கொண்டு வந்ததாக அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட பெண் கல்பிட்டியை சேர்ந்த 48 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். கடவுச்சீட்டுகளுடன் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஒகஸ்ட் - 22 செவ்வாய்க்கிழமை**
சோபகிருது வருடம் - ஆவணி 05
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சஷ்டி




**மேடம்**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பழைய நண்பர்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**இடபம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனங்களால் புது ஒப்பந்தம் செய்வீர்கள். அமோகமான நாள்.

**மிதுனம்**
பிள்ளைகளின் உய்ர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். கனவு நனவாகும்.

**கடகம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**சிம்மம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். அலுவலகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கை நிறைவேறும்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். உற்சாகமான நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். கணுக்கால் வலிக்கும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது. நாவடக்கம் தேவை.

**விருட்சிகம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். பணிகளை போராடி முடிப்பீர்கள். போராடி வெல்லும் நாள்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர் பக்கபலமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். லாபம் பெருகும்.

**மகரம்**
அனுபவ பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள்.வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். மரியாதைக் கூடும்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். மதித்துப் பேசுவார்கள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

# கச்சதீவை மீட்பதற்கு அ. தி. மு. க. ஜெயலலிதா வழியில் போராடும்!

## மதுரை மாநாட்டில் பழனிசாமி உறுதி



*மதுரை, ஒக. 22*

கச்சதீவை மீட்பதற்கு ஜெயலலிதாவின் வழியில் அ. தி. மு. க. தொடர்ந்து போராடும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

மதுரையில் அ. தி. மு. க. எழுச்சி மாநாடு நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் இலட்சக்கணக்கான தொண்டர்கள் உற்சாகத்துடன் பங்கேற்றனர். இதில், பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

அ. தி. மு. க. மாபெரும் இயக்கம். தமிழகத்திலேயே மிகப்பெரிய கட்சி. 31 ஆண்டு காலம் தமிழகத்தை ஆட்சிசெய்த கட்சி. எம். ஜி. ஆர். 1972இல் தொடங்கிய அ. தி. மு. க. 51ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. அ. தி. மு. கவை தொடங்கிய 6 மாத காலத்திலேயே தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் எம். ஜி. ஆர். அவரின் முகத்தை பார்த்தாலே போதும், தானாக வாக்குகள் கிடைக்கும். அப்படி மக்கள் சக்தி பெற்ற கட்சியாக அ. தி. மு. கவும், அதன் தலைவர்களும் திகழ்ந்தனர். எம். ஜி. ஆர். மறைந்த பிறகு இந்த இயக்கம் அழிந்துவிடும் என்று கருணாநிதி கனவு கண்டார். ஆனால், அ. தி. மு. க. அழியவில்லை. ஒருபோதும் அ. தி. மு. கவை அழிக்க நினைக்காதீர்கள். உங்கள் கட்சியை காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

தி. மு. க. ஆட்சியில்தான் கச்சதீவு தாரை வார்க்கப்பட்டது. மத்திய அமைச்சரவையில் தி. மு. க. அமைச்சர்கள் 13 ஆண்டு காலம் இருந்தனர். அப்போது கச்சதீவை மீட்க முயற்சி எடுக்கவில்லை. கடந்த 18ஆம் திகதி முதல்வர் ஸ்டாலின் இராமேஸ்வரம் சென்று கச்சதீவை மீட்போம் என்கிறார். ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அதை மீட்க போராடினார். சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றினார். அவர் வழியில் நின்று கச்சதீவை மீட்கத் தொடர்ந்து போராடுவோம்.

தமிழகத்தில் தற்போது சட்டம் - ஒழுங்கு அடியோடு கெட்டுப்போய் உள்ளது. திமுகவின் 2 ஆண்டுஆட்சியில் பின்னடைவைதான் பார்க்கிறோம். அ. தி. மு. க. மாநாட்டில் 15 இலட்சம் தொண்டர்கள் மக்கள் பங்கேற்று வரலாற்று சாதனை படைத்துள்ளதாக பழனிசாமி தெரிவித்தார்.

# திருக்குறளுக்கு தேசிய நூல் அங்கீகாரம் வழங்க வேண்டும்!

## அ. தி. மு. க. மாநாட்டில் தீர்மானம் வலியுறுத்தல்

*மதுரை, ஒக. 22*

'அ. தி. மு. க. பொன்விழா எழுச்சி' மாநாட்டில் தொண்டர்களின் பலத்த கரகோஷம் மூலம் 32 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருக்குறளை தேசிய நூலாக அங்கீகரித்தல், தமிழக அனைத்து கல்வி நிறுவனங்களிலும் தமிழ் வழிக் கல்வி, தமிழை அரசமைப்பு சட்டம் மூலம் ஆட்சி மொழியாக்குதல், புதுச்சேரியை மாநிலமாக அங்கீகரித்தல் ஆகிய தீர்மானங்களை மத்திய அரசை வலியுறுத்துபவையாக நிறைவேற்றப்பட்டன.

வாக்குறுதிகளை நிறைவேற்றாத தமிழ்நாடு அரசுக்கு கண்டனம். இந்தியாவிலேயே தமிழகத்தை அதிக கடன் வாங்கிய மாநிலமாக மாற்றிய தமிழ்நாடு அரசுக்கு கண்டனம், விவசாயிகளுக்கு எதிரான போக்கை கடைபிடிக்க தமிழ்நாடு அரசுக்கு கண்டனம், மேகதாது அணை கட்டும், அவர்களது கூட்டணி கட்சி காங்கிரஸ் கர்நாடக அரசை கண்டிக்கத் தவறும் தமிழ்நாடு அரசை கண்டித்து தீர்மானம், கச்சதீவை மீட்க மத்திய அரசுக்கு அழுத்தம் தராத தமிழ்நாடு அரசுக்கு கண்டனம் ஆகிய தீர்மானங்களை மாநில அரசை வலியுறுத்தி நிறைவேற்றப்பட்டன.

இதேபோன்று அ. தி. மு. க. கட்சி சார்ந்த தீர்மானங்களுமாக 32 தீர்மானங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டன. (ஐ)

# 'இந்தியா' கூட்டணி வென்றால் நீட் தேர்வு நிச்சயம் இருக்காது!

*சென்னை, ஒக. 22*

"2024 மக்களவை தேர்தலில் நாங்கள் பங்கெடுக்கும் 'இந்தியா' கூட்டணி வெற்றி பெற்றால், நீட் தேர்வு நிச்சயம் தமிழகத்தில் இருக்காது என்ற உறுதியை நான் அளிக்கிறேன்" என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "மாணவர்களின் மருத்துவக் கல்லூரி கனவைச் சிதைக்கும் நீட் தேர்வை இரத்து செய்யாத ஒன்றிய அரசை கண்டித்தும், அதற்குத் துணைபோகும் ஆணவம் பிடித்த ஆளுநரைக் கண்டித்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்ட உண்ணாநிலை அறப்போராட்டம் மாபெரும் வெற்றி பெற்றுள்ளது.

நீட் தேர்வை விலக்க வேண்டும் என்ற கோரிக்கையானது அரசியல் கோரிக்கையல்ல் அது கல்விக் கோரிக்கை. அதிலும் குறிப்பாக, சமூக சமத்துவக் கல்வியை விரும்பும் அனைவரது கோரிக்கை. நீட் தேர்வை விலக்க வேண்டும் என்ற கோரிக்கையானது திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் கட்சியின் கோரிக்கையல்ல் அனைத்து மக்களின் கோரிக்கையாகவும் இன்று மாறி இருக்கிறது.

நீட் தேர்வு அறிமுகம் செய்யப்பட்ட காலத்தில் எதிர்த்தது நாம் சிலர்தான். ஆனால், இன்று இந்தத் தேர்வின் கொடூரத் தன்மையை அனைவரும் அறிந்துவிட்டார்கள். அதனால்தான் கட்சி எல்லைகளை கடந்து இந்தத் தேர்வுக்கு எதிரான முழக்கம் நாடு முழுவதும் கிளம்பி வருகிறது. இவர்களது ஆதரவையும் சேர்த்து இப்போராட்டம் வெளிப்படுத்திவிட்டது.

மிக உறுதியாகக் கூறுகிறேன், 2024 நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் பங்கெடுக்கும் 'இந்தியா' கூட்டணி வெற்றி பெற்றால், நீட் தேர்வு நிச்சயம் தமிழ்நாட்டில் இருக்காது என்ற உறுதியை நான் அளிக்கிறேன் - என்றார். (ஐ)

# கஜேந்திரகுமாரின் வீட்டை முற்றுகையிட வாருங்கள்!

## சிங்கள மக்களை அழைக்கும் கம்மன்பில

கொழும்பு, ஓக. 22

**"வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் தெற்கில் சுதந்திரமாக வாழ்வதை போன்று சிங்களவர்கள் வடக்கு மற்றும் கிழக்கில் சுதந்திரமாக வாழவேண்டும். சிங்களவர்களின் உரிமைகளை வென்றெடுக்க ஆரம்பமாக கொழும்பில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வீட்டின் முன்பாக இவ்வாறு போராட்டத்தில் ஈடுபடுவோம்.**

இந்த போராட்டத்தில் சிங்கள பௌத்தர்கள் அனைவரும், இனவாத கொள்கையற்ற தமிழர்களும் கலந்துகொள்ள வேண்டும்"

-இவ்வாறு பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில அழைப்பு விடுத்தார்.

குருந்தூர் மலை விவகாரம் குறித்து ஊடகங்களுக்கு மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இனவாத கொள்கையுடைய பொன்னம்பலம் பரம்பரையின் மூன்றாவது தலைமுறையான பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை குருந்தூர் மலைக்கு சென்று அரங்கேற்றிய நாடகத்தை நாங்கள் அனைவரும் பார்த்தோம்.

தமிழ் அடிப்படைவாதிகள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நீதிமன்ற அனுமதியை பெற்று அங்கு வருகை தந்ததால் நாங்கள் அவர்களை தடுக்கவில்லை.

நீதிமன்றத்தின் தீர்மானத்துக்கு எதிராகச் செயற்படுவது நீதிமன்றத்தை அவமதிப்பதாக கருதப்படும் என்பதால் நாங்கள் அமைதியாக இருந்தோம்.

தொடர்ந்து அமைதியாக இருப்பது அவர்கள் வெற்றி பெற்றார்கள் என்ற நிலைப்பாட்டை தோற்றுவிக்கும். அவர்கள் மகிழ்ச்சியடையும்.

குருந்தூர் மலை குறித்து முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் வழங்கிய தீர்மானம் எந்தளவுக்கு நியாயமானது என்பது தர்க்கத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை குருந்தூர் விகாரையின் விகாராதிபதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தியுள்ளார்.

குருந்தூர் விகாரை 2200 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கள மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரை என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

குருந்தூர் மலையை சூழ்ந்த பகுதிகளில் புராதன தொல்பொருள்கள் பௌத்த உரிமையை பறைசாற்றுகின்றன.

குருந்தூர் மலை குறித்து மகாவசம்சம் உள்ளிட்ட பௌத்த நூல்களில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. குருந்தூர் விகாரரை பௌத்தர்களுக்கு சொந்தமானதா என்பது சந்தேகத்துக்குரியதொரு விடயமல்ல.

குருந்தூர் மலை தமிழர்களுக்கு சொந்தமானது என்பதற்கும் அங்கு இந்து கோயில் இருந்ததற்கும் எவ்வித தொல்பொருள் சான்றுகளும் கிடையாது.




விகாரையில் உள்ள தூண்களில் ஒரு தூண் வட்ட வடிவில் உள்ளது. இந்த தூண் சிவலிங்கம் என்று குறிப்பிட்டு முறையற்ற தர்க்கத்தை முன்னிலைப்படுத்திக் கொண்டு குருந்தூர் மலை இந்துக்களுடையது என்ற போலியான தர்க்கத்தை முன்னிலைப்படுத்தி பௌத்தர்களுக்கு தடைகளை ஏற்படுத்தியுள்ளார்கள்.

இந்த நாடகத்தை அரங்கேற்ற அரசாங்கம் இடமளித்துள்ளது. ஆனால் பௌத்த மரபுரிமைகளை பேணி பாதுகாக்க வேண்டும் என்ற கொள்கையுடைய பௌத்தர்களுக்கு இந்த நாடகத்தை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது.

தமிழ் அடிப்படைவாதிகளின் நாடகத்துக்கு இடமளித்தால் பௌத்தர்களின் மரபுரிமைகள் இல்லாதொழிக்கப்படும்.

பௌத்த மரபுரிமைகளை அழிக்கும் செயற்பாடுகளை பார்த்துக் கொண்டு அரசாங்கம் கோழைத்தனமாக இருக்கலாம். ஆனால் பௌத்தர்கள் கோழைத்தனமாக இருக்கமாட்டார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருக்கும் காலத்தில் தான் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகள் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளன. அழிக்கப்பட்டுள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் வேண்டியதை செய்யலாம் என்ற நம்பிக்கை உள்ளதால் தமிழ் அடிப்படைவாதிகள் பௌத்த மரபுரிமைகளை அழிக்கிறார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொள்ளுப்பிட்டியில் வாழ்கிறார். அவரின் தந்தையும் கொழும்பில் வாழ்ந்தார். அவரது பாட்டனாரும் கொழும்பில் வாழ்ந்தார்.

இவர் கொழும்பில் வாழ்ந்து கொண்டு விடுமுறை நேரத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு சென்று இனவாதத்தை பரப்பி அதனூடாக பாராளுமன்றத்துக்கு தெரிவாகி சுகபோகமாக வாழ்கிறார்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொழும்பில் வாழ்வதற்கு எவரும் இடையூறு விளைவிக்கவில்லை.

அவரது பரம்பரைக்கும் எவரும் இடையூறு விளைவிக்கவில்லை. கொழும்பில் உள்ள இந்து கோயில்களுக்கு நாங்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபடுகிறோம். தேசிய நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்பதை நாங்கள் பலமுறை வலியுறுத்தியுள்ளோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் சாதாரண தமிழர்கள் அடிப்படைவாத தமிழ் அரசியல்வாதிகளின் கொள்கைகளில் இருந்து வேறுபட்டுள்ளார்கள்.

அடிப்படைவாத பிரிவினைவாதக் கொள்கையுடைய தமிழ் அரசியல்வாதிகளின் பிடிகளில் இருந்து தமிழ் மக்களை விடுவித்தால் மாத்திரமே இந்த நாட்டில் இன நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த முடியும்.

கொழும்பில் இருந்துக் கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களை இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபட தூண்டிவிடும் வரிசையில் பொன்னம்பலம், சுமந்திரன், சம்பந்தன் உள்ளிட்ட அனைவரும் உள்ளடங்குகிறார்கள்.

தெற்கில் இவர்கள் வாழ்வதற்கு உள்ள சுதந்திரத்தை வடக்கில் சிங்களவர்களிடமிருந்து பறிப்பதற்கும் தடையேற்படுத்துவதற்கும் இவர்களுக்கு தார்மீக உரிமையில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் அரசியல்வாதிகள் தெற்கில் சுதந்திரமாக வாழ்வதை போன்று சிங்களவர்கள் வடக்கு மற்றும் கிழக்கில் சுதந்திரமாக வாழவேண்டும்.

அந்த கோரிக்கையை முன்வைக்க எமக்கு உரிமை உண்டு. ஆகவே சிங்களவர்களின் உரிமைகளை வென்றெடுக்க இந்த வாரம் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொழும்பில் வசிக்கும் வீட்டின் முன்பாக போராட்டத்தில் ஈடுபடுவோம்.

இந்த போராட்டத்தில் சிங்கள பௌத்தர்கள் அனைவரும் கலந்துக் கொள்ள வேண்டும் இனவாத கொள்கையற்ற தமிழர்களும் கலந்துக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# முற்றாக எரிந்தது கார்



கொழும்பு, ஓக. 22

காலி, பலப்பிட்டிய ஏத்கந்துர பகுதியில் நேற்று அதிகாலை கார் ஒன்று விபத்துக்குள்ளாகி முற்றாக எரிந்து சேதமாகியுள்ளது.

குறித்த கார் தொலைபேசி தூணில் மோதி விபத்துக்குள்ளானதையடுத்து, தீப்பிடித்து எரிந்ததாக அதன் சாரதி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கார் விபத்துக்குள்ளாகி தீப்பிடித்தபோது அதனுள் சாரதி உட்பட மூவர் இருந்ததாகவும், விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்பிட்டிய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# இறக்குமதி தடைகளை அரசு தொடர்ந்தும் பேணமுடியாது

## ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய



கொழும்பு, ஓக. 22

சர்வதேச வர்த்தகத்திற்கு நாடு திறக்கப்பட வேண்டும் எனவே இறக்குமதி தடைகளை தொடர்ந்தும் பேண முடியாது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டு முதல் 3,000 எச்.எஸ் குறியீடுகளை இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டபோதிலும், இறக்குமதியை நிரந்தரமாக தடை செய்ய முடியாது என அமைச்சர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடுமையான மேற்பார்வையின் கீழ் எஞ்சியுள்ள கட்டுப்பாடுகளை அரசாங்கம் படிப்படியாக நீக்கும்.

நாட்டில் மீண்டும் ஒரு பொருளாதார நெருக்கடி ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கடந்த சில மாதங்களில் பெரும்பாலான இறக்குமதி கட்டுப்பாடுகளை அரசாங்கம் நீக்கியுள்ளது.

அடுத்த மாத நடுப்பகுதியில் திட்டமிடப்பட்டுள்ள சர்வதேச நாணய நிதிய மதிப்பாய்வுக்கு முன்னதாக மீதமுள்ள கட்டுப்பாடுகளும் நீக்கப்படும்-என்றார். (அ)

# சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதி 06 மாதங்களுக்கு பின்பும் செல்லுபடியாகும்

கொழும்பு, ஓக. 22

பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் 06 மாதங்களுக்குப் பின்னரும் செல்லுபடியாகும் என பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும் என்ற விதிமுறைகள் தற்போது நீக்கப்பட்டுள்ளதாக குறித்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் இது தொடர்பில் கல்வி, வெளிவிவகார அமைச்சுக்கள் மற்றும் குடிவரவு மற்றும் ஆட்பதிவு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த ஆவணங்களில் ஏதேனும் திருத்தம் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே புதிய நகலை சமர்ப்பிக்க வேண்டும் என பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவிக்கின்றது.

# பாதசாரி கடவையில் விபத்து; மூதாட்டி உயிரிழப்பு!

கொழும்பு, ஓக. 22

பாணந்துறை நகரின் மத்தியில் உள்ள பாதசாரி கடவையில் நேற்றுக் காலை வீதியைக் கடந்த ஒருவரை வாகனம் மோதியதில் அவர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர் பாணந்துறை பெக்கேகம பகுதியைச் சேர்ந்த ஸ்வர்ண ஹேமமாலா என்ற 60 வயதுடைய பெண் என பொலிஸார் கூறினர்.

உயிரிழந்த பெண் பாணந்துறை நீதிமன்றத்தில் துப்புரவுத் தொழிலாளியாக இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

விபத்தை ஏற்படுத்திய வாகனம் தப்பிச் சென்றுள்ளதாகவும், சாரதியை கைது செய்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அரசு 13ஐ காட்டி திருமலையை அதானிக்கு விற்கப் போகிறதாம்!

## சொல்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஓக. 22

**அரசாங்கம் பொதுமக்களை தவறாக வழிநடத்தி வருவதாகவும், 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் சாக்குப்போக்கில் திருகோணமலை துறைமுகத்தை அதானி குழுமத்திற்கு ஒப்படைக்கும் திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.**

தம்புத்தேகமவில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தின் வரி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. நாட்டின் மொத்த தேசிய வருமானம் 7 வீதம். அரசாங்கத்திற்கு நாடு 8 பில்லியன் ரூபா கடனாகப் பெற்ற திட்டங்கள். நெடுஞ்சாலைகள், தாமரை கோபுரம், பொருளாதார மையங்கள், விமான நிலையங்கள், மாநாட்டு அரங்குகள், விளையாட்டு மைதானங்கள், துறைமுக நகரங்கள் ஆகியவை மீட்கப்பட்ட நிலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன, ஆனால் இவற்றின் மூலம் வருமானம் இல்லை. இவற்றுக்கு செலவிடப்பட்ட பணம் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

குடிமக்கள் இப்போது இந்த அரசாங்க கடன்களுக்கு வரி செலுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்-என்றார். (அ)

# உலகின் மிகப்பெரிய எலி இலங்கை வந்தது



கொழும்பு, ஓக. 22

ஸ்லோவாக்கிய மிருகக்காட்சிச் சாலையிலிருந்து கொண்டுவரப்பட்ட இரண்டு ஜோடி கேபிபராக்கள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் காட்சிப்படுத்தப்படும் என தெஹிவளை மிருகக் காட்சிச்சாலையின் பணிப்பாளர் நாயகம் திலக் பிரேமகாந்த தெரிவித்தார்.

இந்த விலங்குகள் தெஹிவளை மற்றும் பின்னவல மிருகக்காட்சிச்சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

உலகின் மிகப் பெரிய கொறித்துண்ணிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்ட இந்த விலங்குகள் மிகவும் நட்புடன் இருப்பதாகவும், தண்ணீருக்கு அருகில் வசிக்கும் இந்த கேபிபரா தனது சுவாசத்தை நீருக்கடியில் சுமார் ஐந்து நிமிடங்கள் வைத்திருக்கும் திறன் கொண்டது என்றும் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

விலங்கு பரிமாற்றத் திட்டத்தின் படி இந்த மாதத்தின் முதல் வாரத்தில் இலங்கைக்கு அவை கிடைக்கப்பெற்றன. ஒரு மாத தனிமைப்படுத்தப்பட்ட காலத்திற்குப் பிறகு அவை காட்டப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# இலங்கையில் மாரடைப்பால் பாதிக்கப்படும் இளம் ஆண்கள்

## வைத்திய நிபுணர்கள் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஓக. 22

இலங்கையில் 30 வயது முதல் 45 வயது வரை உள்ளவர்களுக்கு மாரடைப்பு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் என வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் இந்த வயதினருக்கு படிப்படியாக மாரடைப்பு ஏற்பட்டு வருவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாரடைப்பு காரணமாக சிலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னரே இறந்து விடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சில மருத்துவமனைகளுக்கு மாதந்தோறும் 10 முதல் 15 மாரடைப்பு நோயாளிகள் செல்கின்றனர். இவர்களில் 90 வீதமானோர் ஆண்கள் என வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

முறையான உணவுப் பழக்கமின்மை, உடற்பயிற்சியின்மை, புகைப்பிடித்தல் மற்றும் போதைப்பொருள் பாவனை, மன உளைச்சல் போன்றவற்றால் மாரடைப்பு ஏற்படுவதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ)

# போதைப்பொருள் கடத்தல்காரன் முகமது சித்திக் ஓமானில் கைது!

கொழும்பு, ஓக. 22

இலங்கையைச் சேர்ந்த முக்கிய போதைப்பொருள் கடத்தல்காரராகக் கூறப்படும் முகமது சித்திக், இந்தியப் பிரஜை போல் மாறுவேடமிட்டு இந்திய கடவுச்சீட்டை வைத்திருந்த நிலையில் ஓமானில் கைது செய்யப்பட்டார் என புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முகமது சித்திக் தொடர்பாக இந்திய பாதுகாப்பு மற்றும் புலனாய்வு அமைப்புகளால் நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் படி, அவர் ஓமானிற்குள் நுழைந்தது குறித்து ஓமன் அதிகாரிகளுக்கு அவர்கள் தெரிவித்தனர்.

முகமது சித்திக் அபுதாபி எல்லையை ஒட்டிய பகுதியில் கைது செய்யப்பட்டார் எனக் கூறப்படுகிறது.

இலங்கைக்குள் பாரிய போதைப்பொருள் கடத்தலுக்கு மூளையாக செயல்பட்ட முகமது சித்திக், பாகிஸ்தானில் உள்ள ஒரு சக்தி வாய்ந்த போதைப்பொருள் கடத்தல்காரரின் சகோதரியை திருமணம் செய்து கொண்டதோடு, இலங்கைப் பெண்ணையும் திருமணம் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

முகமது சித்திக் முன்பு நேபாள எல்லையை ஒட்டிய பகுதியில் இந்தியாவில் தங்கியுள்ளார்.

மகிழங்கமுவ சஞ்சீவ மற்றும் கோத்தா அசங்க என்ற இரு பாதாள உலக குற்றவாளிகளும்



அவருடன் தங்கியிருந்ததாகவும் கூறப்படுகிறது.

சஞ்சீவ மற்றும் அசங்க ஆகியோர் இந்திய பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களிடம் விசாரணை நடத்திய பின்னர் சித்திக் இருக்கும் இடத்தை அவர்கள் கண்டுபிடித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

ஆனால் சஞ்சீவ மற்றும் அசங்க இன்னும் இந்திய காவலில் இருக்கிறார்களா என்பது குறித்த தெளிவான தகவல்கள் இன்னும் கிடைக்கவில்லை.

இங்குள்ள சில பாதுகாப்பு அதிகாரிகள் தங்கள் தனிப்பட்ட தொடர்புகளின் அடிப்படையில் இந்தியாவிடம் இருந்து தகவல்களைக் கேட்டபோது, முகமது சித்திக் கைது செய்யப்பட்டதை அதிகாரபூர்வமற்ற மட்டத்தில் இந்திய அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

முகமது சித்திக் இந்தியாவில் உள்ள நீதிமன்றத்தால் நீண்டகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருப்பதும், அவருக்கு எதிராக இன்டர்போல் மூலம் இந்தியா சிவப்பு நோட்டீஸ் அனுப்பியதும் தெரியவந்துள்ளது.

அந்தக் குற்றத்திற்காக சித்திக் இந்தியாவில் கைது செய்யப்பட் டதாகவும், பின்னர் அவர் சிறை யில் இருந்து தப்பிச் சென்றதாக வும் கூறப்படுகிறது. அதன்படி அவரை கைது செய்வதற்கான நடவடிக்கையை இந்திய பாதுகாப்பு படையினர் மேற்கொண்டுள்ளனர்.

தற்போது ஓமன் பிடியில் உள்ள சித்திக் என்பவரை இந்தியா அழைத்து வர இந்திய பாதுகாப்பு படையினர் நடவடிக்கை எடுத்து வருவதாக கூறப்படுகிறது.

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகள் மற்றும் பயங்கரவாத குழுக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதில் சித்திக் பிரபலமானவர்.

2003ஆம் ஆண்டு பொரலஸ்கமுவ பகுதியில் ஜீப்பில் ஹெரோயின் போதைப்பொருளை ஏற்றிச் சென்ற மொஹமட் சித்தீக் உள்ளிட்ட ஐவரை மேல்மாகாண வடக்கு குற்றப் பிரிவினர் கைது செய்தனர்.

நீண்ட நாட்களாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த அவர், பிணையில் வெளிவந்து பின்னர் நாட்டை விட்டு வெளியேறி டுபாய், பாகிஸ்தானில் தங்கியிருந்தார்.

ஹெரோயின் போதைப்பொருளை இந்தியா ஊடாக இலங்கைக்கு கொண்டு வருவதற்கு பதிலாக பாகிஸ்தானில் இருந்து கொள்கலன்களில் மறைத்து ஹெரோயினை இலங்கைக்கு கொண்டு வர சித்தீக் ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இங்கிருந்து சீஷெல்ஸ் மற்றும் மாலைதீவுகளுக்கு போதைப்பொருள் விநியோக வலையமைப்பையும் சித்திக் ஆரம்பித்திருந்தார்.

நீண்ட விசாரணைக்கு பின், அவருக்கு எதிராக இன்ரர்போலில் இருந்து சிவப்பு அறிவிப்பு பெற பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

இதனையடுத்து, மொஹமட் சித்திக் மற்றும் வெலே சுதா ஆகியோர் பாகிஸ்தானில் வைத்து பாகிஸ்தான் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டனர். கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் குழுவொன்று சென்று சித்தீக்கை இலங்கைக்கு அழைத்து வந்தது.

அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு செப்ரெம்பர் மாதம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பொரலஸ்கமுவ பிரதேசத்தில் சித்தீக்குடன் கைது செய்யப்பட்ட போதைப்பொருளின் மொத்த எடை 8.3 கிராம் என அரசாங்க பகுப்பாய்வாளர் தெரிவித்துள்ளார். அது தொடர்பிலான நீண்ட விசாரணைக்குப் பின்னர், 2018 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 13 ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றம், சித்திக் உட்பட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 5 பேரையும் விடுதலை செய்தது. அவர் மீதான குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கத் தவறியதன் அடிப்படையிலும், முரண்பட்ட சாட்சியங்களின் அடிப்படையிலும் அது அமைந்தது. இதையடுத்து அவர் இந்தியாவுக்கு தப்பிச் சென்றுவிட்டார்.

சர்வதேச பொலிஸாரின் ஊடாக இந்தியா சித்திக்கிற்கு எதிராக சிவப்பு நோட்டீஸ் பிறப்பித்துள்ள போதிலும், அவருக்கு எதிராக இலங்கையிலிருந்து அவ்வாறான உத்தரவு எதுவும் இல்லை என பொலிஸ் தகவல் மூலம் தெரியவந்துள்ளது. (அ)

# மாகாண சபை முறை ஒழிக்கப்படவேண்டும்

## டிரான் அலஸின் கட்சி யோசனை

கொழும்பு, ஓக. 22

**மாகாணசபை முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் யோசனை முன்வைத்துள்ளது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் கட்சியான ஐக்கிய மக்கள் கட்சி.**

**எனினும், ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பரவலாக்கலுக்கு தமது கட்சி முழு ஆதரவும் வழங்கும் எனவும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.**

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம், அதிகாரப்பகிர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் சர்வகட்சி மாநாட்டை நடத்தியிருந்தார். அதன்பின்னர் மேற்படி விவகாரங்கள் தொடர்பில் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகள், ஆலோசனைகளை எழுத்துமூலம் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் கோரியிருந்தார்.

இதற்கமைய ஐக்கிய மக்கள் கட்சியால் ஜனாதிபதி செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

“மத்திய அரசுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இடையே இடைநிலைக் கட்டமைப்பாக ‘மாவட்ட சபை’ முறை மூலம் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.

நியாயமான அதிகாரப் பகிர்வைக் கொண்ட ஐக்கிய நாட்டை உருவாக்குவதற்கு, மாவட்ட சபைகளை நிறுவி, உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்குவதன் அடிப்படையில் புதிய மக்கள் நட்பு அரசியலமைப்பை உருவாக்க வேண்டும்.”

வடக்கு-கிழக்கு பிரதேசங்களை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகளுக்கு மாகாண சபை முறைமை ஸ்தாபிக்கப்பட்டதன் மூலம் தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. மேலும், பிராந்திய அபிவிருத்திக்கான மாகாண அதிகாரக் கட்டமைப்பை உருவாக்குவது என்பது அடையப்படும் என எதிர்பார்க்கப்பட்ட மற்றொரு நோக்கமாகும். ஆனால் இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதில் மாகாண சபை முறைமை வெற்றியடையவில்லை. எனவேதான் காலாவதியான, பயனற்ற கருத்தாக மாறியுள்ள மாகாணசபை முறைமை முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் எமது கட்சி உள்ளது.” எனவும் மக்கள் கட்சியால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(அ)

# அமைச்சர் டக்ளஸ்- கருணா நேற்று கொழும்பில் சந்திப்பு



கொழும்பு, ஓக. 22

கடலுணவுகளைத் தனியார் முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் ஏற்றுமதி செய்வது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பானது கடற்றொழில் அமைச்சில் நேற்று நடைபெற்றது.

இச்சந்திப்பில் புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்த தனியார் முதலீட்டாளர்களின் பிரதிநிதிகள் குழுவினரும் கலந்து கொண்டனர்.

சர்வதேச சந்தைகளுக்கு கடலுணவுகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் நாட்டுக்கு தேவையானஅந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்வதுடன், கடற்றொழில் சார்ந்த மக்களின்வாழ்வாதாரத்தையும் வலுப்படுத்த முடியும் எனவும் இச்சந்திப்பின் போது அமைச்சர் டக்ளஸ் வலியுத்தியுள்ளார்.

(அ)

# கட்டுப்படுத்த முடியாத நிலையில் கைமீறி செல்கிறது மணல் அகழ்வு

கிளிநொச்சி, ஓக. 22

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பிரதேசங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு கட்டுப்படுத்த முடியாத நிலையில் கைமீறி செல்கிறது என பொது மக்கள குற்றச் சாட்டுகின்றனர்.

நாளுக்கு நாள் இவ்வாறான சட்டவிரோத மணல் அகழ்வுகள் அதிகரித்துச் செல்கின்றன.

குறிப்பாக கடலுக்கு அண்மையாக உள்ள கிராமங்களில் அதிகரித்துள்ள சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக முழுக் கிராமமும் பாதிக்கப்படுகின்ற ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள பிரதேச மக்கள், இவற்றை கட்டுப்படுத்த தவறின் தாம் தமது ஊர்களை இழந்து விடுவோம் எனவும் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்லாறு, உமையாள்புரம் விளாவோடை, தட்டுவன்கொட்டி, இரணைமடுவும் அதனை அண்டிய பிரதேசங்களும், ஊரியான், முரசுமோட்டை, பெரியகுளம், கிளாலி உள்ளிட்ட பல பிரதேசங்களில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுப்படுகின்றவர்களின் விவரங்களை சம்மந்தப்பட்ட தரப்பினர்களுக்கு வழங்கினால் அன்றிரவு தங்கள் வீடுகள் தாக்கப்படுவது

அல்லது தங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படுவது என அச்சுறுத்தல்களும் இடம்பெறுவதனால் பொதுமக்களாகிய நாம் அமைதி காக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பல தடவைகள் குறித்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டபோதும் சரி, மாவட்டத்தில் உள்ள பாராளுமன்ற

உறுப்பினர்களின் கவனத்திற்கு பல தடவைகள் கொண்டு சென்ற போதும் இதுவரை எவராலும் எதுவும் நடக்கவில்லை என்று தெரிவிக்கும் பொதுமக்கள், சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்களில் பெரும்பாலானவர்கள் அரசியல் தரப்புகளின் செல்வாக்குள்ளவர்கள் என்றும் தெரிவித்துள்ளனர்.

(அ)

# மன்னாரில் சிறப்பாக செயல்படும் குருதி மாற்றுச் சிகிச்சைப் பிரிவு!

மன்னார், ஓக. 22

நாட்டில் அண்மைக்காலமாக சிறுநீரக சிகிச்சைகள் தொடர்புபட்ட பிரச்னைகளால் பாதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையானது அதிகரித்து வரும் நிலையில் மன்னாரில் குருதி சிகிச்சைப் பிரிவின் கீழ் தற்போது 60 சிறுநீரக நோயாளர்கள் சிறப்பான சிகிச்சையை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது.

மன்னார் வைத்தியசாலையின் குருதி சிகிச்சை பிரிவானது வைத்தியர் சிசில் மற்றும் வைத்தியர் மல்ஷா ஆகியோரின் கீழ் இயங்கி வருவதுடன் சிறுநீரக பிரச்னைகளால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையும் சடுதியாக குறைவடைந்துள்ளது.

நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாடுகள் உட்பட பல்வேறு பிரச்சினைகளையும் கடந்து உள்ளூர் மற்றும் வெளியூர் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கும் விதமாக குறித்த சிகிச்சை பிரிவு ஐந்து வருடங்களில் வளர்ச்சி அடைந்துள்ளது.

கடந்த 2018ஆம் ஆண்டுக்கு முன்னர் மன்னார் மாவட்டத்தில் சிறுநீரக சிகிச்சை பிரிவு இன்மையால் பல சிறுநீரக நோயாளிகள் தங்கள் சாதாரண சிகிச்சைக்காக கூட மன்னார் மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணம், வவுனியா, அனுராதபுரம் போன்ற மாவட்டங்களுக்கு செல்ல வேண்டிய அவல நிலை காணப்பட்டது.

இதேவேளை, அவசர நோயாளர்கள் பலர் சிகிச்சை நிலையங்களுக்கு மன்னாரில் இருந்து அனுப்பப்படுவதற்கு முன்னர் பல உபாதைகளுக்கு உள்ளாகியிருந்த அனுபவங்களும் நோயாளர்களிடம் காணப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் சிறுநீரக சிகிச்சை நிலையத்தின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் இரண்டு நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கக்கூடிய விதத்தில் அக்காலப்பகுதியில் வைத்தியசாலையில் காணப்பட்ட வளங்களை கொண்டு கடந்த 2018ஆம் ஆண்டு சாதாரண இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

தற்போது மன்னார் சிறுநீரக குருதி மாற்றுச் சிகிச்சை பிரிவானது வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்களின் அர்பணிப்பின் காரணமாக 60 நோயாளிகளை பராமரிக்க கூடிய அளவில் சிறந்த சிகிச்சையை வழங்கி வருகிறது.

இந்த சிகிச்சை பிரிவு ஐந்து வருடங்களில் கிழமை 140 நபர்களுக்கும் நாள் ஒன்றுக்கு 20 நபர்களுக்கு சிகிச்சை வழங்கக் கூடிய நிலையில் வளர்ச்சியடைந்துள்ளது.

சாதாரணமாக ஒரு நோயாளிக்கு இரத்த சுத்தீகரிப்புக்கு நான்கு மணித்தியாலங்கள் தேவைப்படும் நிலையில் மாதத்திற்கு குறைந்தது 500 தடவைகள் சுத்திகரிப்பு செயற்பாடுகள் இவ் நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

வாரத்தில் ஏழு நாட்களும் இந்த பிரிவு சேவையாற்றுவதுடன் ஒரு சிறுநீரக நோயாளி கட்டாயம் கிழமைக்கு 2 அல்லது 3 முறை இவ் நிலையத்திற்கு வருகை தந்து இரத்த சுத்திகரிப்பில் ஈடுபடவேண்டிய அவசியம் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த குருதி சிகிச்சை பிரிவின் வைத்தியர் சிசில், நாடளாவிய ரீதியில் சிறுநீரகம் தொடர்புட்டப்பட்ட நோய்கள் அதிகரித்துள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இவ் சிகிச்சை பிரிவினை பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்த வேண்டும்.

சிறுநீரக நோயுடன் தொடர்புடைய அறிகுறிகள் காணப்படும் பட்சத்தில் வைத்தியசாலை வைத்தியர் ஊடாக தங்களது சிறுநீரக குருதி சுத்திகரிப்பு பிரிவின் உடைய சிகிச்சையை பொது மக்கள் பெற முடியும்.” என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலை மீது மற்றொரு பெற்றோரும் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 22

களனியைச் சேர்ந்த தரம் ஒன்று மாணவனொருவர் அண்மையில் லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் உயிரிழந்தமைக்கு, வைத்தியசாலையின் அலட்சியமே காரணமென அவரது பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குழந்தை காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் பல நாட்களுக்குப் பிறகும், பல பரிசோதனைகளுக்குப் பிறகும் மருத்துவர்கள் பிள்ளையின் நோயைக் கண்டறியத் தவறியதாக பெற்றோர்கள் கூறுகின்றனர்.

பிள்ளையின் உள் உறுப்புகளின் செயல்பாடுகள் குறித்து லேடி ரிட்ஜ்வே மருத்துவமனை மருத்துவர்களால் உத்தரவிடப்பட்ட தனியார் மருத்துவமனையிலிருந்து எடுக்கப்பட்ட சோதனை அறிக்கைகள் அனைத்தும் இயல்பானவை என்று பெற்றோர்கள் கூறினர்.

(அ)

# வறட்சியால் 50 ஆயிரம் ஏக்கர் விவசாயக் காணிகள் பாதிப்பு

கொழும்பு, ஓக. 22

நிலவும் வறட்சியுடனான காலநிலை காரணமாக 50,000 ஏக்கர் விவசாய காணிகள் அழிவடைந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

உடவளவ பிரதேசத்தில் மாத்திரம் ஏற்பட்ட சேத விளைவுகளை மதிப்பீடு செய்வதற்கு 5 குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

# கடும் வறட்சியினால் பாவக்கொடிச்சேனை மக்கள் குடிதண்ணீரின்றி தவிக்கும் அவலம்!

மட்டக்களப்பு, ஓக. 22

**தொடரும் கடும் வறட்சி நிலையுடனான காலநிலை காரணமாக மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நெடியமடு, பாவக்கொடிச்சேனை உள்ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் குடிதண்ணீரின்றி தாம் தினமும் சிரமப்படுவதாகவும், குடிதண்ணீருக்காக மிக நீண்ட தூரம் பயணித்து அதனைப் பெற்றுக் கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**



மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசமாகவும் கடந்தகால யுத்த பாதிப்புக்களை எதிர்கொண்ட அந்த மக்கள் தினமும் அதிகாலை வேளையில் குடிதண்ணீர் எடுப்பதற்காக மிக நீண்ட தூரம் கால்நடையாகச் செல்லும்போது காட்டு யானைகளின் தாக்குதல்களுக்கு உட்படுவதாகவும், தொடர்ந்து அச்சத்துடன் பயணித்து குடிதண்ணீரைப் பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும், இதனால் தமது பிள்ளைகள் உரிய நேரத்துக்கு பாடசாலைக்குச் செல்வதில் சிரமம் உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தொடரும் வறட்சி நிலைமை காரணமாக மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவில் 2000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் பிரதான தொழிலாக காணப்படும் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பும், என்பன இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. கால்நடைகளுக்குரிய பச்சைப் புற்கள் தற்போது கருகிய நிலையில் காணப்படுவதாகவும் கால்நடைகள் குடிதண்ணீர் இன்றி அலைந்து திரிவதாகவும் தெரிவிக்கும் ஏனையோருக்கு வழங்கப்படுவது போன்று குழாய் மூலமான குடிதண்ணீரைப் பெற்றுத்தர துறைசார்ந்தவர்கள் உடன் முன்வரவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போது அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விவசாய நடவடிக்கைகள் வறட்சி காரணமாக முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. பயன்தரும் மரங்களும், பாதிக்கப்பட்டுள்ளன.

சிறுவர்கள் நீண்ட தூரம் பயணித்து குளிப்பதற்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் பன்ச்சேனை, கரவெட்டி. நெடியமடு, தாண்டியடி, காந்திநகர், உன்னிச்சை, உள்ளிட்ட பல கிராம மக்கள் இந்த வரட்சியினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான குடிதண்ணீர் வழங்கல் திட்டம் அந்த மக்கள் வாழ்கின்ற, வவுணதீவில் காணப்படுகின்றபோதிலும், அதனை அண்டிய பிரதேசங்களில் உள்ள கிராம மக்களுக்கு அந்த திட்டத்தினூடாக விநியோகிக்கப்படும் குடிதண்ணீர் கிடைக்காமல் அவர்கள் காட்டு யானை தாக்கத்துக்கு உள்ளாவதும் தொடர் கதையாகவே இருந்து வருவது வேதனைக்குரிய விடயமாகும்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவர்களுக்கு உரிய குடிதண்ணீர் வழங்குறிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(அ)

# கல்முனையில் இடம்பெற்ற நடமாடும் இலவச சுகாதார வைத்திய சேவை!



கல்முனை, ஓக. 22

ஆளுநரின் பணிப்புரைக்கமைவாக கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள மாவட்ட அலுவலகம் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இணைந்து நடாத்தும் நடமாடும் இலவச சுகாதார வைத்திய சேவைகள் கடந்த சனிக்கிழமை கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந் நடமாடும் இலவச சுகாதார வைத்திய சேவையில் பற்சிகிச்சை, கண்பரிசோதனை, தொற்றா நோய் பரிசோதனைகள்,ஆயுர்வேத மருத்துவ சேவைகள், உடல் நிறை குறியீடு பார்த்தல் ,இரத்த அழுத்தம் நீரிழிவு நோய்க்குரிய பரிசோதனைகள், தகுதியுடையவர்களுக்கான பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு விண்ணப்ப விநியோகம்,தகுதியு டையவர்களுக்கான முதியோர் அடையாள அட்டை விண்ணப்ப விநியோகம், மாற்றுத் திறனாளிகளுக்கான சுகாதார சேவைகள் தகுதியுடையவர்களுக்கான நோய்க் கொடுப்பனவுக்கான விண்ணப்ப விநியோகம் (புற்றுநோய், சிறுநீரக நோய், தலசீமியா, தொழுநோய்) என்பன மேற்கொள்ளப்பட்டன.

இந்த நடமாடும் சேவையில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி,கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் முஹம்மத் அஸ்மி, கல்முனை பிராந்திய வாய்ச்சுகாதார நிபுணர் எம்.எச்.எம் சரூக் ,நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எச் ஜனூபா, சமூக சேவைகள் உத்தியோகத்தர் எம் .ஜீசான் , உட்பட மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள், மற்றும் சுகாதார பரிசோதகர்கள் , குடும்ப நல உத்தியோகத்தர்கள், கல்முனை பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# கல்முனையில் சமூக செயற்பாட்டு சான்றிதழ் கற்கைநெறி தொடர்கிறது



காரைதீவு, ஓக. 22

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பு ஏற்பாடு செய்த மூன்று மாத காலச் சமூக செயற்பாடு சான்றிதழ் கற்கை நெறி பிரதி சனி, ஞாயிறு தினங்களில் கிரமமாக நடைபெற்று வருகிறது.

இதன் அங்குரார்ப்பண வைபவம் கடந்த சனிக்கிழமை பெண்கள் வலையமைப்பின் தலைவி திருமதி தியாகேஸ்வரி ரூபன் தலைமையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

வலையமைப்பின் பொதுச் சபை இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரனின் ஒழுங்கமைப்பில் வகுப்புகள் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் ஞாயிறு முழு நேர செயலமர்வை மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெனிட்டா மோகன் நடத்தியிருந்தார்.

(அ)

# 2 அபிவிருத்தி ஒருங்கிணைப்பு கூட்டங்களில் தெரிவித்தும் பாதை செப்பனிடப்படவில்லை!



காரைதீவு, ஓக. 22

காரைதீவு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் அரைகுறையாக கிடக்கும் பாதை செப்பனிடப்பட வேண்டும் என இரண்டு தடவைகள் கூறப்பட்ட பொழுதிலும் இன்னும் அது செப்பனிடப்படவில்லை என்று பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

காரைதீவு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனின் பிரசன்னத்தில் பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் ஏற்பாட்டில் இடம்பெற்ற பொழுது குறித்த விபுலானந்த வீதி கார்பெட் இடப்பட்டும் இரு மருங்கிலும் முடிவுறுத்தப்படாமல் இருப்பது குறித்து முறைப்பாடு இரு தடவைகளில் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக இரண்டு கூட்டங்களில் இந்த முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.

அதில் கலந்து கொண்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர் இதனைச் சீர் செய்து தருவதாக பகிரங்கமாக உறுதி அளித்திருந்தார்.

ஆனால் ஐந்து மாதங்கள் கடந்தும் இன்னும் அந்த காப்பட் வீதி இது மருங்கிலும் செப்பனிடப்படவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் இந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களால் பொதுமக்களுக்கு என்ன பயன் ? பல மணி நேரம் மனித வலு மற்றும் நிதி செலவழிப்பதில் என்ன பிரயோசனம் என்று பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

இவ் வீதி ஏனவே கொங்கிறீட் வீதியாக இருந்தது. ஆனால், மக்களின் எந்தவித கருத்தும் எடுக்கப்படாமல் அதற்கு மேலே இரண்டு அடி உயரத்தில் கார்பெட் இடப்பட்டது. இதனால் மக்களின் குடிமனைகள் தாழ்ந்து போனது. அத்துடன் வாகனங்களை வீதிகளில் ஏற்றுவதற்கு மிகவும் சிரமப்படுகின்றார்கள். அதனால் வாகனங்கள் பழுதடைந்து விடுகின்றன .எனவே இதனை சீர் செய்து தருமாறு அந்த மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

(அ)

# அம்பிளாந்துறையில் குருதி கொடை நிகழ்வு



மட்டக்களப்பு, ஓக. 22

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்தின் 140ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு குருதி கொடையாக வழங்கும் மனிதாபிமான செயற்பாடு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், வித்தியாலய அதிபர் க.அரசரெத்தினம் தலைமையில் இச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

வித்தியாலய பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் இக்குருதி கொடையை வழங்கினர். இதனை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினர் பெற்றுக்கொண்டனர்.

(அ)

# உக்ரைனுக்கு 61 எவ்-16 விமானங்கள் வழங்கும் நெதர்லாந்து, டென்மார்க்!

கீவ், ஓக. 22

**அமெரிக்கா தயாரித்த எவ்-16 போர் விமானங்களை தனது நாட்டுக்கு வழங்க நெதர்லாந்து மற்றும் டென்மார்க் எடுத்த முடிவை உக்ரைனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி வரவேற்றுள்ளார்.**

**நெதர்லாந்து மற்றும் டென்மார்க்கில் இருந்து 61 எவ்-16 போர் விமானங்களை உக்ரைன் பெறும் என்று வோலோடிமிர் ஜெலென்ஸ்கி ஞாயிற்றுக்கிழமை அறிவித்தார். இரு நாடுகளின் நன்கொடை மேலும் பல நாடுகளுக்கு போர் விமானங்களை நன்கொடையாக அளிக்கும் என்று நம்புவதாக அவர் கூறினார்.**

கிழக்கில் ரஷ்யப் படைகளுக்கு எதிராக போரிடும் உக்ரைன், தனது சோவியத் கால விமானப் படையை வலுப்படுத்த பல மாதங்களாக மேம்பட்ட போர் விமானங்களை நட்பு நாடுகளிடம் கோரி வந்தார்.

எவ்-16 விமான பரிமாற்றங்களுக்கு அமெரிக்கா தனது ஒப்புதலை வெள்ளிக்கிழமை அறிவித்தது. உக்ரைன் விமானிகளுக்கான பயிற்சி இந்த மாதம் தொடங்க உள்ளது. 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஜெட் விமானங்களை உக்ரைன் பயன்படுத்தத் தொடங்கும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நெதர்லாந்தில் உள்ள ஐன்ட்ஹோவன் விமானத் தளத்திற்கு விஜயம் செய்தபோது, நெதர்லாந்து பிரதமர் மார்க் ரூட்டேவுடன் இணைந்து, இந்த முடிவு "முற்றிலும் வரலாற்றுச் சிறப்புமிக்கது, சக்தி வாய்ந்தது மற்றும் எங்களுக்கு ஊக்கமளிக்கிறது" என்று ஜெலென்ஸ்கி கூறினார்.

நெதர்லாந்து விமானப்படையிடம் 42 எஃப்-16 விமானங்கள் உள்ளன. அவற்றை உக்ரைனுக்கு வழங்குவதாக ரூட்டே கூறினார்.



பின்னர் ஞாயிற்றுக்கிழமை, ஜெலன்ஸ்கி டென்மார்க்கின் விமானத் தளத்திற்குச் சென்று பிரதமரால் வரவேற்கப்பட்டார்.

"உங்களுக்கு மேலும் தேவை என்பதை நாங்கள் அறிவோம், அதனால்தான் உக்ரைனுக்கு 19 எவ்-16 போர் விமானங்களை நன்கொடையாக வழங்குவோம் என்று இன்று அறிவித்தோம்" என்று டென்மார்க் பிரதமர் கூறினார்.

6 ஜெட் விமானங்கள் இந்த ஆண்டு இறுதியிலும், 8 அடுத்த ஆண்டும் மற்றும் 5 2025 இல் வழங்கப்படும் என்று பிரடெரிக்சன் கூறினார்.

"இது எங்களுக்கு மிகவும் சக்திவாய்ந்த ஆதரவு - பயிற்சி பணிகள் ஏற்கனவே தொடங்கி உள்ளன," ஜெலன்ஸ்கி பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

"உக்ரைனுக்கு இன்னும் அதிகமான முடிவுகளைப் பெற நாங்கள் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம். குறிப்பாக, இன்று பயிற்சி பணிகளின் விரிவாக்கம் குறித்து விவாதித்தோம். உக்ரைனின் வான் கவசம் வலுவடைந்து வருகிறது" என்றார்.

(அ)



# அமெரிக்காவில் வீட்டில் சடலமாக மீட்கப்பட்ட இந்திய தம்பதி, மகன்

நியூயோர்க், ஓக. 22

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தை சேர்ந்த தம்பதியும் அவர்களின் 6 வயது மகனும் அமெரிக்காவில் உள்ள வீட்டில் இருந்து சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் மேரிலாந்து மாகாணத்தின் பல்டிமோர் பகுதியில் வசித்த வந்த தம்பதி 37 வயதான யோகேஷ் நாகராஜப்பா மற்றும் 35 வயதான பிரதீபா.

இவர்களுக்கு 6 வயதில் யாஷ் என்ற மகன் இருந்தான்.

யோகேஷ்-பிரதீபா தம்பதி கடந்த 9 ஆண்டுகளாக அமெரிக்காவில் வசித்து வந்தனர்.

இந்த நிலையில், கடந்த 18ஆம் திகதி மூவரும் துப்பாக்கி குண்டு காயங்களுடன் உயிரிழந்து கிடந்துள்ளனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த பொலிஸார் மூன்று பேரின் உடல்களையும் கைப்பற்றி விசாரணையை தொடங்கினர்.

முதற்கட்ட விசாரணையில் யோகேஷ் தனது மனைவி மற்றும் மகனை கொலை செய்துவிட்டு தற்கொலை செய்ததாக தெரியவந்துள்ளது.

அவர்களின் துயர மரணம் தொடர்பான கூடுதல் விவரங்கள் பிரேத பரிசோதனை முடிவுக்கு பின்னரே தெரியவரும்.

யோகேஷ் தாயார் கூறுகையில், ஒரு வாரத்திற்கு முன்பு என் மகனிடம் பேசினேன். டிசம்பரில் இந்தியா வர முயற்சிப்பேன் என்றான்.

திடீரென்று, மூவரும் இறந்துவிட்டதாக எனக்கு அழைப்பு வந்தது. என்ன நடந்தது என்றே தெரியவில்லை.

மூவரின் உடல்களையும் இந்தியா கொண்டு வர அரசாங்கம் உதவ வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார். (அ)

# அருங்காட்சியகத்தில் பொருட்கள் திருட்டு

## ஊழியர் பணிநீக்கம்



லண்டன், ஓக. 22

பிரித்தானியாவின் தலைநகரான லண்டனில் உள்ள உலகப்புகழ் பெற்ற பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் விலைமதிக்கமுடியாத பொருட்கள் பல திருடப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த அருங்காட்சியகத்தில் கி.மு. 15ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.19 ஆம் நூற்றாண்டு வரையிலான பழங்கால நகைகள், வைர கற்கள், கண்ணாடிகள் போன்ற பல்வேறு பொருட்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அவ்வப்போது இங்கு கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருவதால் ஆண்டுக்கு சுமார் 60 லட்சம் பேர் இதனைப் பார்வையிட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அண்மையில் அருங்காட்சியகத்தில் நடத்திய ஆய்வின்போது பல்வேறு பொருட்கள் திருடப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

எனினும் சமீப காலமாக அங்கு கண்காட்சிகள் எதுவும் நடத்தப்படவில்லை என்பதால் இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடந்த கண்காட்சியின்போது இவை திருடப்பட்டு இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இச்சம்பவம் இது தொடர்பாக ஊழியர் ஒருவரை பணிநீக்கம் செய்துள்ளதாகவும், திருடப்பட்ட பொருட்களை மீட்டெடுக்க தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அருங்காட்சியகத்தின் தலைவர் ஜோர்ஜ் தெரிவித்துள்ளார்.

(அ)

# சீனாவில் வேலையின்மை திண்டாடும் பட்டதாரிகள்

பீஜிங், ஓக. 22

உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடான சீனாவில் வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்துள்ளது. இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றி தவித்து வருகின்றனர். குறிப்பாக புதியவர்களின் நிலைமை மோசமாக இருப்பதாக கூறப்படுகிறது.

வேலை தேடும் சீன நிறுவனங்களுக்கு ஆயிரக்கணக்கான விண்ணப்பங்களை அனுப்பியதாகவும் ஆனால் தான் தெரிவு செய்து படித்த சந்தை ஆராய்ச்சி துறையில் வேலை கிடைக்கவில்லை எனவும் உளவியல் பட்டதாரியான ஜாங் என்பவர் கூறியுள்ளார்.

இவ்வாறான நிலைமையில், பல்கலைக் கழகத்தில் படிக்கும் போதே வேலை தேடும் இளைஞர்களின் மனநிலை குறித்து கருத்து கணிப்பு நடத்தப்பட்டுள்ளது.

பட்டப்படிப்புக்கு பின்னர் இளைஞர்கள் மீதான உளவியல் அழுத்தத்தை தான் அனுபவித்ததாக பீஜிங்கில் அண்மையில் நடந்த ஆட்சேர்ப்பு கண்காட்சியில் கலந்துக்கொண்ட ஜாங் செய்தி நிறுவனம் ஒன்றிடம் கூறியுள்ளார். அவர் அனுப்பும் ஒவ்வொரு பத்து விண்ணப்பங்களுக்கு ஒரே பதிலே கிடைப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



இளைஞர்கள் வேலையின்மை அதிகரித்து வரும் சந்தர்ப்பத்தில் சீனாவின் வேலை சந்தையில் நுழையும் மில்லியன் கணக்கான பட்டதாரிகளில் ஜாங் என்பவரும் ஒருவர்.

16 முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே வேலையின்மை என்ற பிரச்னை ஜூன் மாதத்தில் 21.3 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இந்த நிலையில், தமது நாட்டில் வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்து வருவதை உலகத்திற்கு தெரியப்படுத்தாமல் வயது அடிப்படையிலான வேலை வாய்ப்பு விபரங்களை வெளியிடுவதை நிறுத்தி வைப்பதாக சீன அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

சீனாவில் அனுபவம் இல்லாத விண்ணப்பதாரிகளுக்கு வேலை கிடைப்பது பெரும் சவாலாக மாறியுள்ளது என பீஜிங்கில் நடைபெற்ற தொழில் கண்காட்சிகளில் கலந்து கொண்ட இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

மத்திய பீஜிங்கில் நடந்த வேலை வாய்ப்புக் கண்காட்சியில் விளம்பரங்களைப் பார்த்து ஏமாற்றம் அடைந்ததாக இளைஞர்கள் கூறியுள்ளனர்.

கண்காட்சியில் கலந்துக் கொண்ட நிறுவனங்கள் விற்பனை மற்றும் நிர்வாக வேலைகளை மட்டுமே வழங்குகின்றன.

அதுவும் குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர்களுக்கான வேலைகளே வழங்கப்பட்டதாகவும் கண்காட்சியில் கலந்துக் கொண்ட இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

(அ)

# குற்றச்சாட்டுகளை கண்டு பின்வாங்கப்போவதில்லை

## அநுரகுமார திட்டவட்டம்

கொழும்பு, ஒக. 22

**தேசிய மக்கள் சக்தி ஒருபோதும் பொதுமக்களின் நிதியை துஷ்பிரயோகம் செய்ததில்லை என அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

கம்பஹாவில் நடைபெற்ற பேரணியில் உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒருவரின் பணப் பரிவர்த்தனை தொடர்பாக இந்த நாட்களில் பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நாட்டு மக்களின் பணத்தில் ஒரு சதம் கூட நானோ அல்லது எனது கட்சியைச் சேர்ந்த எவரும் திருடவில்லை அல்லது வீணடிக்கவில்லை.

அவ்வாறு மக்களின் பணம் திருடப்பட்டாலோ அல்லது வீணாக்கினாலோ இப்படி அரசியல் செய்ய முடியாது.

அவதூறுகள் மற்றும் குற்றச்சாட்டுக்களை கண்டு நாம் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை.



எமது கட்சி பிரபலமடைந்து வருவதால் எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் மேலும் அதிகரிக்கும்-என்றார். (அ)

# பஸ்ஸுக்கு வெளியே தலை நீட்டிய மாணவன் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக. 22

கல்வி சுற்றுலாவுக்காக பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்தில் மாணவர் ஒருவர் ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டியதால் விபத்து ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

குளியாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய பாடசாலை மாணவனே உயிரிழந்துள்ளார்.

ஹபராதுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ருமஸ்ஸல மலையை நோக்கிச் செல்லும் குறுக்கு வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸின் பின் இருக்கையில் பயணித்த மாணவன் ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டிய போது மின்கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த மாணவர் கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபராதுவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# காலி சிறைச்சாலையில் கைதி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக. 22

காலி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

சுவாசக் கோளாறு காரணமாக காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இறந்தவர் காலி சிறைச்சாலையின் சந்தேகநபர் இலக்கம் 2840 இலக்கமுடைய 32 வயதுடையவர் ஆவார்.

மூச்சுத் திணறல் காரணமாக சிறைச்சாலை அதிகாரிகளால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் கராப்பிட்டிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

கடந்த இரண்டாம் திகதி முதல் அவர் காலி சிறைச்சாலையில் உள்ளார்.

இறந்தவரின் பிரேத பரிசோதனை காலி கராபிட்டிய போதனா வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

(அ)


# சிங்கப்பூர் ஜனாதிபதியை சந்தித்து பேசினார் ரணில்

கொழும்பு, ஒக. 22

இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சிங்கப்பூர் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிங்கப்பூர் ஜனாதிபதி ஹலீமா யெகோப்பை, நேற்றுக் காலை சந்தித்தார்.

ஜனாதிபதி இரு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று அதிகாலை சிங்கப்பூர் பயணித்தார்.

இந்த விஜயத்தில் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட



ஆலோசகர் ருவான் விஜேவர்தன, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க ஆகியோரும் ஜனாதிபதியுடன் சிங்கப்பூர் பயணித்துள்ள்ளனர்.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் போது பெரிஸ் உடன்படிக்கையின் கீழ் கார்பன் சீராக்கல் தொடர்பான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 25 பழைய வட்டாரம் 01 காரைதீவு வீதி ஆதன இலக்கம் 140 எமது ஆதனப் பதிவேட்டில் முருகேசு இளையவன் என்ற பெயரில் காணப்படுகிறது.

குறித்த ஆதனம் முருகேசு இளையவன் பிரசித்த நொத்தாரிசு மாரிமுத்து சோமசுந்தரம் முகதாவில் 14.08.1943 ம் திகதியிட்டு 399 ம் இலக்க அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 01 கொண்ட ஆதனத்தை இளையவன் செல்லையாவுக்கு கைமாற்றியுள்ளார்.

பின்னர் இளையதம்பி செல்லையா பிரசித்த நொத்தாரிசு M.M.சுல்தான் முகதாவில் 05.02.1956 ம் திகதியிட்டு 2783 ம் இலக்க அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 01 கொண்ட ஆதனத்தை கொத்தர் தம்பிப்பிள்ளை பெண் வேலாச்சிக்கு கைமாற்றியுள்ளார்.

குறித்த ஆதனம் வைரவன் கோதன் கைம்பெண் சிறீனி பிரசித்த நொத்தாரிசு சுப்பையாப்பிள்ளை இராசையா முகதாவில் 13.02.1955 ம் திகதியிட்டு 490 ம் இலக்க அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 01 கொண்ட ஆதனத்தை கொத்தர்தம்பிப்பிள்ளைக்கு கைமாற்றியுள்ளார்.

குறித்த ஆதனத்தை கொத்தர்தம்பிப்பிள்ளை பிரசித்த நொத்தாரிசு சுப்பையாப்பிள்ளை இராசையா முகதாவில் 28.12.1958 ம் திகதியிட்டு 723 ம் இலக்க அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 01 கொண்ட ஆதனத்தை தம்பிப்பிள்ளை வெள்ளாச்சிக்கு கைமாற்றியுள்ளார்.

குறித்த ஆதனத்தை கொத்தர் தம்பிப்பிள்ளை கைம்பெண் வெள்ளாச்சி பிரசித்த நொத்தாரிசு கணபதி சிவலிங்கம் முகதாவில் 15.12.1971 ம் திகதியிட்டு 959 ம் இலக்க அறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 01 கொண்ட ஆதனத்தை அறுதியாக தம்பிப்பிள்ளை கந்தசாமிக்கு கைமாற்றியுள்ளார்.

குறித்த ஆதனத்தை மக்கள் வங்கி பிரசித்த நொத்தாரிசு ஜெயவர்த்தனன் முகதாவில் 11.02.1980ம் திகதியிட்டு 106 ம் இலக்க அறுதி உறுதி மூலம் விஸ்தீரணம் நெற்பரப்பு 01 கொண்ட ஆதனத்தை கொத்தர் தம்பிப்பிள்ளை கைம்பெண் வெள்ளாச்சிக்கு கைமாற்றியுள்ளார்.

குறித்த ஆதனத்தை தம்பிப்பிள்ளை கந்தசாமியும் பெண் கனகம்மாவும் பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா முகதாவில் 2.10.2016 ம் திகதியிட்டு 2820 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கந்தசாமி மகள் தயாளினுக்கு விஸ்தீரணம் நெற்பரப்பு 02 கொண்ட ஆதனத்தை கைமாற்றியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண பகுதி வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை இது யாழ்ப்பாண பிரதேச செயலகப் பகுதியில் யாழ் மாநகரசபைக்குட்பட்ட J/81 கிராமசேவகர் பிரிவில் உள்ள “பள்ளுவிலி தோட்டம்” நெற்பரப்பு 01 (பதிவுD266/8) மற்றும் நெற்பரப்பு 01 (பதிவுD386/213) இவை இரண்டும் ஒன்றாக்கி நெற்பரப்பு இரண்டு வீடும் கிணறும் இந்த நெற்பரப்பு 2 க்கும் எல்லை.

கிழக்கு - டாக்டர் பாரதியின் ஆதனம்
வடக்கு - இளையவன் பெண் வள்ளியின் ஆதனம்
மேற்கு - றோட்டு
தெற்கு - டாக்டர் பாரதியின் ஆதனம் இதடங்கலும்

தற்போது கந்தசாமி மகள் தயாளினி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு / முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தசாமி மகள் தயாளினி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர், மாநகரசபை. யாழ்ப்பாணம்.**

# ஆயிரம் மரக்கன்றுகளை நடும் செயல்திட்டம் நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஒக. 22

பேண்தகு அபிவிருத்தி இலக்குகளில், பருவகால மாற்றத்தினால் ஏற்படும் பிரச்னைகளை எதிர்கொள்வதற்காக வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள 1000 மரக்கன்றுகள் நடும் செயற்திட்டம் நேற்று யாழ். செம்மணிப் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் இ.பகீரதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மரநடுகை திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.பிரணவநாதன், நல்லூர் பிரதேச சபை செயலாளர் யு.ஜெலீபன், வலிகாமம் தெற்கு கமக்கார அமைப்பின் செயலாளர் ந.கஜேந்திரகுமார், செம்மணி இந்து மயானத் தலைவர் இ.லட்சுமிகாந்தன், இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பா.பிரதீபன்,நல்லூர் வடக்கு சனசமூக நிலையத் தலைவர் பூ.லிங்கநாதன், நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலைய தலைவர் இ.ரூபன் ஆகியோர் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தனர்.

(அ)

ஈழநாடு



## நல்லூர்...

நிறைவேற்றும் பொருட்டு அங்கப்பிர தட்சணம், அடியழித்தல் உள்ளிட்ட நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.

செங்குந்த மரபினரால் வடிவ மைக்கப்பட்ட கொடிச் சீலை பாரம் பரிய முறைப்படி நேற்றுமுன்தினம் வேல் மடம் ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டு, அங்கு விசேட பூசை வழிபாட்டின் பின்னர் சிறிய தேரில் வைத்து இழுத்து வரப்பட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் கையளிக்கப் பட்டது.

எதிர்வரும் செப்ரெம்பர் 14 ஆம் திகதி தீர்த்தத் திருவிழா வரை தொடர்ச் சியாக 25 நாட்களுக்கு திருவிழா நடை பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## 5,000...

தலையீடு செய்யாமல் அவர்களை அனுப்பி விட்டு பார்த்துக்கொண்டிருந்தனர்.

இந்த நிலைமை தீவிரமடைந்து முழு சுகாதார துறையும் பிளவுபடுத்த நடவ டிக்கைகளை மேற்கொள்வதாகக்கூறி இழுத்தடிப்பு செய்யாமல் பிரச்னைகளை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கி றோம்.

கடந்த வருடம் சுமார் ஆயிரத்து 500 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளி யேறி அவர்கள் சென்றுள்ள நாடுகளில் மருத்துவ தொழில் ஈடுபட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் சுமார் 5 ஆயிரம் மருத்துவர்கள் முதன்மை பட்டப்படிப்பு மற்றும் முதுமானி பட்டப்படிப்புகளை மேற்கொள்ள வெளிநாடுகளுக்கு செல்ல எதிர்பார்த்துள்ளனர். ஆகவே, மருத்துவ துறையில் திறமைசாலிகள் வெளியேறும் நிலையே இதுவாகும். நாட்டில் மருத்து வத் துறையில் ஏற்பட்டுள்ள இந்த நிலைமையை வேறு எந்தத் துறையிட னும் ஒப்பிட முடியாது. இது அவசர நிலைமையாகும்.

மருத்துவத்துறைக்கு ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் முழுமையாக மருத்து வராக சுமார் 7 வருடங்கள் செல்கின்றன. விசேட மருத்துவராக 10 அல்லது 12 வரு டங்கள் செல்கின்றன. இன்று தீர்வை பெற்றுக் கொள்வதற்கு முயற்சித் தால் பதிலைப் பெறுவதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டி ஏற்பட் டுள்ளது. வாய் இருக்கிறது என்பதற்காக வெறுமனே புலம்புகின்ற சுகாதார அதிகாரிகள் குறைந்தபட்சம் வெளியேற வுள்ள 5 ஆயிரம் மருத்துவர்களை தக்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# 13இன் அமுலாக்க முயற்சிகள் முரண்பாட்டையே ஏற்படுத்தும்

## ஜீ. எல். பீரிஸ் எம். பி. சொல்கிறார்



கொழும்பு, ஒக. 22

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப் பாட்டுக்கும் பொதுஜன பெரமுனவின் நிலைப்பாட்டுக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன. பொதுஜன பெரமுனவின் ஆதரவு இல்லாமல் பாராளுமன்றத்தில் எந்த தீர்மானத்தையும் நிறைவேற்ற முடியாது என்பதை ஜனாதிபதி நன்கு அறிவார். 13ஆம் திருத்த அமுலாக்க முயற்சிகள் இறுதியில் முரண்பாடுகளை மாத்திரம் தோற்றுவிக்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சுதந்திர மக்கள் சபை தலைமை பணிமனையில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்படி கூறினார்.

மேலும், "ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க அரசமைப்பின் 13ஆவது திருத்த அமுலாக்கம் பற்றி பாராளுமன்றத்தில் விசேட உரை நிகழ்த்தினார். அரசமைப்பு மாற்றம், புதிய சட்ட உருவாக்கம், புதிய நிர்வாக ஒழுங்கு விதிகள் உருவாக்கம், புதிய நிறுவனங்கள் ஸ்தாபித்தல் மற்றும் உறுப்பினர் நியமனம் குறித்து குறிப் பிட்டார்.

தேசிய நல்லிணக்கத்தை உறுதிப் படுத்த வேண்டுமாயின் 13ஆவது திருத் தத்தை அமுல்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால், அரசாங்கத்தின் பிரதான அரசியல் கட்சியான பொதுஜன பெரமுன 13 ஆவது திருத்தம் குறித்து ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு எதிர்மறையான நிலைப்பாட்டை கொண்டுள்ளார்.

13 ஆவது திருத்தம் குறித்து ஜனாதி பதி விசேட உரையாற்றியதன் பின்னர் தென்னிலங்கையில் 13 ஆவது திருத்தத் துக்கு எதிரான எதிர்ப்புகள் வலுப்பெற் றுள்ளன. ஆகவே 13 ஆவது திருத்த அமுலாக்க முயற்சிகள் இறுதியில் முரண்பாடுகளை மாத்திரம் தோற்று விக்கும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத் தத்தை அமுல்படுத்த முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட அரசாங்கம் மக்கள் மத்தியில் செல்ல அச்சமடைந்துள்ளதால் தேர்தல் வாக் கெடுப்பு தொடர்பில் இதுவரை முன்னேற்றகரமான எந்த நடவடிக்கை களும் எடுக்கப்படவில்லை. மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் அதிகார பகிர்வு குறித்து பேச்சில் ஈடுபடுவது பயனற்றது.

அரசாங்கத்தின் தவறான பொருளா தார கொள்கையால் மூளைசாலிகள் நாட்டை விட்டு நாளாந்தம் வெளியேறு கிறார்கள். மருத்துவர்கள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், வங்கியியலா ளர்கள் உட்பட பிரதான தொழில்துறை யினர் நாட்டை விட்டு செல்வதால் எதிர்காலத்தில் சமூக கட்டமைப்பு பெரும்நெருக்கடிகளை எதிர்கொள்ளும்.

மூளைசாலிகள் வெளியேறுத்தை அரசாங்கத்தால் பலவந்தமான முறையில் தடுக்க முடியாது. தொழிற்துறையினர் எதிர்கொண்டுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. மாறாக அவர்களுக்கு எதிரான நடவடிக் கைகளை முன்னெடுத்துள்ளது - என்றார்.

## கிளிநொச்சி...

திரும்பியபோது எதிர்ப்பக்கம் இருந்து வந்த கார் மோதியது.

இதில் மோட்டார் சைக்கிளில் பய ணித்த ஆசிரியை படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப் பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார். (ஐ)

## அடுத்தடுத்து நான்கு விபத்துகள்!

யாழ்ப்பாணம், ஒக. 22

சாரதிகளின் கவனவீனம் மற்றும் அதி வேகம் காரணமாக நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் நான்கு வாகனங்கள் மோதிக் கொண்டன. இதில், சொகுசு பயணிகள் பேருந்து பயணிகள் அதிர்ஷ் டவசமாக தப்பினர்.

ஏ-09 பிரதான வீதியில் கொடிகாமம், கோயிலாமனை சந்திக்கு அண்மையாக திருமண மண்டபம் முன்பாக இந்த விபத்து இடம்பெற்றது.

யாழ்.- கொழும்பு சொகுசு பயணிகள் பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து முன்னால் பயணித்துக் கொண்டிருந்த காருடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் கார் பலத்த சேதங்களுக்குள்ளானது.

இவ் விபத்து இடம்பெற்று கொடிகா மம் பொலிஸார் சம்பவ இடத்தில் விசார ணைகளை மேற்கொண்டிருந்த வேளை அப் பகுதியில் மேலும் இரு வாகனங்கள் மோதி விபத்துக்கு உள்ளாகின.

கொடிகாமம் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு விபத்துக்குள் ளான நான்கு வாகனங்களையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

## சமஷ்டி...

- இவ்வாறு அந்தக் கட்சியின் தலை வர் மாவை சேனாதிராசா தெரிவித்துள் ளார்.

மட்டக்களப்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் இனப்பிரச்னைக்கு தீர்வாக 13ஆவது திருத்தச் சட்டம் தீர் வாக முன்வைக்கப்படுகின்றது. திம்பு உள்ளிட்ட சட்டங்கள் மூலமாக 13இன் அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன. இந் திய - இலங்கை ஒப்பந்தத்தில் உள்ள வாறு 13ஆவது திருத்தச் சட்டம் நடை முறைப்படுத்தப்பட வேண்டும். ஆனால், இதுவும் முழுமையான தீர்வு அல்ல.

சுயநிர்ணய உரிமையின் அடிப்படை யில் சமஷ்டி கட்டமைப்பு அரசியல் தீர்வையே தமிழரசுக் கட்சி முன்னெடுக் கும். தமிழ் மக்களின் பிரச்னையை தீர்வுக்காக எதிர் காலத்தில் முன்னர் போன்று தமிழ்த் தேசிய கூட்டமைப் பாகவும் செயல்படுவோம் - என்றும் இதன்போது அவர் குறிப்பிட்டார். (ஐ)

## குருந்தூர்மலை...

அத்துடன், விடுதலைப் புலிகள் காலத்தில் பௌத்த மத வழிபாட்டுக்கு எவ்வித இடையூறும் இருந்ததில்லை எனவும் மாறாக பாதுகாப்பே இருந்தது அதற்கு காரணம் விடுதலை புலிகள் நாங்கள் அணிந்திருந்த எங்கள் காவி உடைக்கு தந்த மரியாதை என்றும் அவர் கூறினார்.

தேசிய ஒற்றுமைக்கான சர்வமத மக்கள் ஒன்றியம், இந்து பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் குருந்தூர்மலை விவகாரம் தொடர்பான சந்திப்பு நேற்று திங்கட்கிழமை வவுனியா சிறீ போதி தக்சனாராமை விகாரையில் நடை பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், குருந்தூர்மலை விவகாரம் தொல்பொருள் திணைக்களத்துக்குரியது. இதனை தனி ஒரு மதம் மட்டும் தனக்கானது என உரிமை கொண்டாடக் கூடாது. சிங்கள - பௌத்தர்கள் இங்கு வாழ்ந்தார்கள் என்பது முரணானது. இங்கு தமிழ் பௌத்தர்கள் இப்பகுதியில் வாழ்ந்தனர் என்பதுவே உண்மை.

தெற்கில் சம்பந்தமே இல்லாமல் சிங்கள - பௌத்த கிராமத்துக்குள் கிறிஸ்தவ மதகுருவோ அல்லது சைவ பூசகரோ வந்து தங்கள் தளம் எனகூறி உரிமை கொண்டாடினால் சிங்கள - பௌத்தர்கள் ஏற்றுக்கொள்வார்களா அல்லது விட்டுத்தான் கொடுப்பார்களா? அவ்வாறிருக்கும் போது தமிழரின்பூர்வீக இடமான குருந்தூர்மலையில் பௌத்த துறவி ஒருவர் தினமும் சென்று உரிமை கொண்டாடினால் தமிழர்கள் மட்டும் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று நினைப்பது எவ்வாறு சாத்தியப்படும்.

வணக்க ஸ்தலங்கள் எல்லா மதத்தவ ருக்கும் எல்லா இனத்தவருக்கும் உரியது சிங்கள- பௌத்தம் என்றில்லாமல் நாங்கள் - இலங்கையர்கள் யாரும் வணங் கலாம் என்ற பொதுநிலையில் நாம் சிந்திக்க வேண்டும். ஒரு சிலர் இவ்விட யத்தை அரசியலாக்கி இனங்களிடையே முறுகலை ஏற்படுத்த முயல்கின்றனர். இவ்வாறான தொல்பொருள் இடத்தின் முழுப்பொறுப்பையும் தொல்பொருள் திணைக்களம் மட்டுமே மேற்கொள்ள வேண்டும். இதில் வேறு எந்த மதத்த வரும் தலையிடக்கூடாது - என்றார்.

இந்தச் சந்திப்பில் நயினாதீவு ரஜமகா விகாரை விகாராதிபதி பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர், மடுக்கந்தை விகாராதிபதி மூவ அட்டகம ஆனந்த தேரர், உலுக்குளம் விகாராதிபதி பெரிய உலுக்குளம சுமணதிஸ்ஸ தேரர், கணேசபுரம் கருமாரி நாகபூசணி அம்மன் ஆலய பிரதம குரு பிரம்மசிறீ பூ. முகுந்தன்சர்மாஈ தவ்ஜீத் ஜும்மா பள்ளிவாசல் மௌலவி சதுர்தீன் மௌலவி, ஓமந்தை பங்கு தந்தை ஜெஸ்லீ ஜெகநாதன், ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

## 13ஐ...

13ஆவது திருத்தம் தற்போது முள்செடியில் மாட்டிய சேலையைப் போல் உள்ள நிலையில் அதனை கிழி யாமல் எடுத்து செய்ய வேண்டியதை செய்வதே எமது இலக்காக இருக்க வேண்டும். இதை ஏன் நான் உதாரண மாக கூறினேன் என்றால் 13இற்கு எதிரானவர்கள் தென்னிலங்கையில் இருக்கின்ற நிலையில் 13 தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் ஆரவாரப் பட்டால் தேவையற்ற பிரச்னைகளை ஏற்படுத்தக்கூடும்.

13ஆவது திருத்தம் தொடர்பில் சிங்கள மக்களை குழப்புவதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் செயல்பட்டு வரும் நிலையில் அவர் களின் உசுப்பேத்தல்களுக்கு தமிழ் தரப்பு கள் கூப்பாடு போட்டால் அரசாங்கத் துக்கு இடையூறுகள் ஏற்படும். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்கான ஆரம்ப கட்ட தீர்மா னங்களை மேற்கொண்டுள்ளார்.

பதின்மூன்றை நடைமுறைப்படுத்துவ தற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசிய மற்ற நிலையில் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் அதனை நடைமுறைப்படுத்த முடியும். ஆகவே, 13 தொடர்பில் தேவையற்ற பேச்சுகளை தவிர்த்து தந்திரமான முறை யில் அதனை நடைமுறைப்படுத்துவதே சிறந்தது - என்றும் அவர் கூறினார். (ஐ)

## சிங்கள...

த. சித்தார்த்தன்.

நேற்று அவர் யாழ்ப் பாணத்தில் உள்ள தனது இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், மத வாதத்தை தமிழ் அரசி யல்வாதிகள் தூண்டவில்லை. தென்னி லங்கை அரசியல்வாதிகளே தூண்டுகின் றனர். இதற்கு, அரச தரப்பை சேர்ந்த பலர் ஊக்கம் அளிக்கின்றனர்.

குருந்தூர்மலையில் சிவன் ஆலயம் கட்டுவது பிரச்னை இல்லாமல் முடிய வேண்டும். இதை வரவேற்கிறோம். அனைவரும் ஒற்றுமையாக நின்று சிவன் கோயிலை கட்டி முடிக்க வேண்டும். இதை நாங்கள் ஆதரிப்போம். இது ஏமாற்றும் விடயமாக இருக்ககூடாது.

மற்ற மதம் இங்கு வேண்டாம் என நாம் சொல்லவில்லை. எங்கள் மத ஸ்தலத்தில் அவர்களின் ஸ்தலங்களை கொண்டுவர வேண்டாம் என்றுதான் நாம் சொல்கின்றோம்.

சிங்களவர் மத மொழி பிரச்னையை தூக்கமாமல் விட்டிருந்தால் இந்த நாடு இப்படி இருந்திருக்காது. மீண்டும் மதப் பிரச்னையை தூக்கியுள்ளனர். இது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தப் போகிறது. பௌத்தம் - இந்து மதங்க ளிடையேயான வித்தியாசத்தை தமிழர் கள் பெரிதாகக் கருதவில்லை. இது அரசியல் மயப்படுத்தப்படுகிறதே தவிர, அவர்களுக்கு மதத்தில் அவ்வளவு ஆர் வம் இருப்பதான நினைக்கவில்லை - என் றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி மட்டக்களப்பில் போராட்டம்

## 30ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடு

மட்டக்களப்பு, ஒக. 22

வடக்கு-கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வ தேச நீதிகோரி எதிர்வரும் 30ஆம் திகதி மட்டக்களப்பில் மாபெரும் போராட்டம் ஒன்று முன்னெடுக் கப்படவுள்ளது.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன் னிட்டு இந்த போராட்டம் முன் னெடுக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவுகளின் சங்கத்தின் ஏற் பாட்டில் வடக்கு - கிழக்கு மாகாண 08 மாவட்ட சங்கங்களும் இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

மட்டக்களப்பு கல்லடி பாலத் திலிருந்து எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிய ளவில் பேரணி ஆரம்பமாகி மட்டக் களப்பு காந்தி பூங்கா அருகில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத்தூ பியருகில் நிறைவு பெற்றதும் அங்கு நீதி கோரிப் போராட்டம் முன்னெ டுக்கப்படும்.

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட வர்களுக்கு சர்வதேச நீதி கோரி முன்னெடுக்கப்படும் இந்த போராட்டத்திற்கு சிவில் சமூக அமைப்புகள், பொது அமைப்புகள், பல்கலைக்கழக மாணவ அமைப்பு கள், தமிழ் தேசிய பரப்பில் உள்ள அரசியல் கட்சிகள் ஆதரவு தெரி வித்துள்ளன.

வடக்கு - கிழக்கில் தமது உறவு களுக்கு நீதிகோரி முன்னெடுக்கப் படும் போராட்டத்திற்கு தமிழ் தேசியப்பரப்பில் உள்ள அனைத்து தரப்பினரையும் ஒன்றிணையுமாறு மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தலைவி அ. அமலநாயகி வேண்டுகோள் விடுத் துள்ளார். (அ)

# மீண்டும் உயரும் எரிவாயு விலை!

கொழும்பு, ஒக. 22

இலங்கையில் சமையல் எரிவாயுவின் விலை மீண்டும் அதிகரிக்கப்படவுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத் தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உலகச் சந்தையில் ஏற்பட்டிருந்த விலை அதிகரிப் புக்கு அமைவாக, கடந்த மாதமே சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படவிருந்தது.

எனினும், இறுதி நேரத்தில் இந்த விலையேற்றம் கைவிடப்பட்ட நிலையில், இம்மாதம் அதனை அதிக ரிக்கும் எண்ணத்தில் லிட்ரோ நிறுவனம் இருப்பதாக தெரியவந்துள்ளது.

அதற்கமைய இந்த விலை உயர்வு உள்ளூர் சந்தையி லும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலை இந்த மாதம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த மாதம் 4ஆம் திகதியளவில், 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் 204 ரூபாவால் குறைக்கப்பட்டு 2982 ரூபாயாக அறிவிக்கப் பட்டது.

அதேபோல், 5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் 83 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 1198 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. இந் நிலையில், மீண்டும் எரிவாயு விலை அதிகரிக்கப்படு கின்றமையானது மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ)

# சுங்கத் திணைக்கள பெயரை பயன்படுத்தி நிதி மோசடிகள்

கொழும்பு, ஒக. 22

நாட்டில் உள்ள நிறுவனங்கள் சுங்கத் திணைக்களத் தின் பெயர் மற்றும் தகவல்களை பயன்படுத்தி நிதி மோசடிகள் அதிகரித்துள்ளது. இதன்காரணமாக பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மை காலமாக சுங்கத் திணைக்களத்தின் உத்தி யோகபூர்வ ஆவணங்கள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் நிறுவன அதிகாரிகளின் பெயர்களை பயன் படுத்தி பல்வேறு வகையில் மோசடி சம்பவங்கள் இடம் பெற்று வருவதாக சுங்கத் திணைக்கள பணிப்பாளர் சுதத் சில்வா தெரிவித்தார்.

மேலும்,இனந்தெரியாத நபர்களின் வங்கிக் கணக்கு களுக்கு பணத்தை மாற்றுவதை தவிர்க்குமாறும், இவ்வா றான மோசடிகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் உடன டியாக பொலிஸில் முறைபாடு வழங்கவேண்டும் என வும் சுதத் சில்வா பொதுமக்களிடம் கோரிக்கை விடுத் துள்ளார். (அ)

# இந்திய அரசின் உதவியுடன் நாடு பூராகவும் 1,401 வீடுகள்

கொழும்பு, ஒக. 22

நாடு பூராகவும் உள்ள 101 கிராமங்களில் 1401 வீடு களின் கட்டுமானப் பணிகள் தற்போது இந்திய அரசாங் கத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 661 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 338 வீடுகளின் நிர்மா ணப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அதிகார சபை குறிப்பிட்டுள் ளது.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்பட்டு வரும் 101 கிராமங்களில் 07 கிராமங்களில் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மக்க ளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கம்பஹா, கண்டி, வவுனியா, பதுளை, அனுராதபுரம் ஆகிய மாவட்டங் களில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக் கப்பட்ட கிராமங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள் ளன. மாத்தளை, கிளிநொச்சி, புத்தளம் ஆகிய கிராமங் களில் வீடு நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

இந்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக் கப்படவுள்ள வீடுகளின் எண்ணிக்கை 2400 ஆகும். எஞ்சியுள்ள கிராமங்களின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துமாறு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவுறுத்தல் வழங்கி யுள்ளார். (அ)

# பாராளுமன்ற பணிப்பெண்களை சேலை அணியுமாறு பணிப்புரை

கொழும்பு, ஒக. 22

பாராளுமன்ற பராமரிப்பு திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களையும் சேலை அணிந்து கட மைக்கு சமூகமளிக்குமாறு திணைக்களத்தின் செயலா ளர் கடந்த வாரம் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

பாராளுமன்ற பராமரிப்புத் திணைக்களத்தில் இளம் பெண்களை துன்புறுத்தியதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பிலான செய்திகள் அண்மையில் ஊடகங்களில் வெளியாகியிருந்தது.

பாராளுமன்ற பராமரிப்புத் திணைக்களத்தின் தலைவர்கள், பாராளுமன்றத்திற்கு பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் புடைவை அணிந்து செல்லுமாறு பணிப்பெண்களுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

சில மேலதிகாரிகளால் பணிப்பெண்களுக்கு இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் பாலியல் துன்புறுத் தல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வ தற்காக பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவினால் மூவரடங்கிய குழு வொன்று அண்மையில் நியமிக்கப்பட்டது.

இதன்படி, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரு வதுடன், பாலியல் துன்புறுத்தல் சம்பவம் தொடர்பில், அவருக்கு எதிராக போதிய சாட்சியங்கள் உள்ளதால், பாராளுமன்ற பராமரிப்புத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான உண்மைகளை ஆராய்வதற் காக நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழுவின் விசார ணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும், பணிப்பெண்கள் உட்பட பதினைந்துக்கும் மேற்பட் டோர் குழுவில் இதுவரை ஆஜராகி சாட்சியமளித் துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், பாலியல் துன்புறுத்தல் சம்பவம் தொடர்பாக தனி விசாரணை நடத்த பாராளுமன்ற மகளிர் மன்றம் முடிவு செய்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (அ)

# வெங்காயம் விலை உயர்வு

கொழும்பு, ஒக. 22

வெங்காயத்துக்கு 40 சதவீத ஏற்றுமதி வரியை விதிப்பதற்கு இந்திய அரசாங்கம் தீர்மானித்த நிலையில் இலங்கையில் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ள தாக இலங்கை இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில், ஒரு கிலோ கிராம் வெங்காயத்தின் விலை 50 தொடக்கம் 70 ரூபாய் வரை அதிகரித்து ,200 முதல் 220 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக அவர்கள் கூறினர்.

கடந்த ஜூலை மாதம் முதல் இந்தியாவில் வெங்காய விலை அதிகரித்துள்ளதன் காரணமாக, டிசெம்பர் 31ஆம் திகதி வரை மேற்குறிப்பிட்ட தீர்மானத்தை இந்திய அரசாங்கம் எடுத்துள்ளது.

இதன் காரணமாக இந்தியாவில் இருந்து வெங் காயத்தை இறக்குமதி செய்யும் நாடுகள் பாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கையில் பெரிய வெங்காயச் செய்கை தொடர்பாக உடனடியாக அறிக்கை சமர்ப்பிக் குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர விவசாயத் திணைக்களத்திடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வெங்காயச் செய்கை நீண்ட காலமாக வெற்றியடைந்து வந்தாலும் கடந்த சில வருடங்களாக அது தோல்வியடைந்துள்ளதாக அமைச்சர் சுட்டிக் காட்டினார். (அ)



# தமிழ் மீனவர்களின் படகுகள் தண்ணிமுறிப்பில் தீக்கிரை!

முல்லைத்தீவு, ஒக. 22

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பில் தமிழ் மீனவர்களின் 4 படகுகள் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் முழுமையாக எரித்து தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடு படுகின்ற அப்பகுதியை சேர்ந்த மீனவர்களின் படகு களே இவ்வாறு எரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்நிலையில் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பும் தண்ணிமுறிப்பு குள பகுதியில் வைத்து 6 படகுகள் தீக்கிரையாக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு மீனவர்களின் படகுகள் தொடர்ச்சியாக சேதமாக்கப்பட்டு வருவதாகவும் அப்பகுதி மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களுக்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குரிய இழப்பீட்டினை வழங்கவேண்டும் எனவும் மீனவர்களின் சார்பில் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அநுராதபுரம் கதிரேசன் கோவில் அருகே நடந்த விபத்தில் தாய், மகள் உயிரிழப்பு





கொழும்பு, ஒக. 22

அநுராதபுரம் - விலாச்சி வீதியில் உள்ள கதிரேசன் கோவிலுக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

36 வயதான தாய் மற்றும் ஒன்பது வயதான மகள் ஆகியோர் உயிரிழந்துள்ளனர். மோட்டார் சைக்கிள் ஒன்றும் பாரவூர்தி ஒன்றும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதனிடையே, இலங்கையில் விபத்துகள் காரண மாக நாளாந்தம் ஏற்படும் உயிரிழப்புகளின் எண் ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

இந்நிலையில், விபத்துகளை தடுக்கும் நோக்கில் அர சாங்கம் மற்றும் பாதுகாப்பு தரப்பினர் விசேட நடவ டிக்கைகளை முன்னெடுத்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# எல். பி. எல். இருபது - 20 சம்பியனானது கண்டி!




கொழும்பு, ஓக. 22

எல். பி. எல். இருபது - 20 நான்காவது பருவத்தின் சம்பியன் பட்டத்தை பி லவ் கண்டி அணி கைப்பற்றிய. வெற்றிக் கிண்ணத்துடன், ஒரு இலட்சம் டொலர் - சுமார் 3 கோடியே 19 இலட்சம் ரூபாய் பணப் பரிசையும் அந்த அணி கைப்பற்றியது.

கொழும்பு ஆர். பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடந்த பரபரப்பான இறுதிப் போட்டியில் தம்புள்ளை ஔராவை எதிர்த்து பி லவ் கண்டி அணி மோதியது.

இறுதிப் போட்டியில் காயம் காரணமாக அணித் தலைவர் வனிந்து ஹசரங்க ஆடவில்லை. அவருக்கு பதிலாக அஞ்சலோ மத்தியூஸ் அணியை வழிநடத்தி னார்.

தம்புள்ளை அணி நிர்ணயித்த 148 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கை துரத்திய பி லவ் கண்டி அணி 19.5 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்த 151 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

புதிய ஆரம்ப வீரராக களமிறங்கிய கமிந்து மெண்டிஸுடன் வழக்கமான மற்றைய ஆரம்ப வீரர் மொஹமத் ஹரிஸ் களம்புகுந்தார். 39 பந்துகளில் 49 ஓட்டங்களை பகிர்ந்து பலமான ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தார்.

திறமையாக துடுப்பெடுத்தாடிய மொஹமத் ஹரிஸ் 26 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து கமிந்து மெண்டிஸும் தினேஷ் சந்திமாலும் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடி 2ஆவது விக்கெட்டில் 45 ஓட்டங்களைப் பகிர்ந்தார். சிறப்பாக ஆடிய கமிந்து 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மொத்த எண்ணிக்கைக்கு மேலும் 11 ஓட்டங்கள் சேர்த்தபோது ஓட்ட வேகத்தை அதிகரிக்க எண்ணி சிக்ஸர் அடிக்க முயற்சித்த தினேஷ் சந்திமால் 24 ஓட்டங்களுடன் களம் விட்டகன்றார். அடுத்து களம் புகுந்த சதுரங்க டி சில்வா தான் எதிர்கொண்ட 4ஆவது பந்தில் சிக்ஸர் அடிக்க முயன்று ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் அசிப் அலி ஓட்ட வேகத்தை அதிகரிக்க விளைந்து 10 பந்துகளில் 19 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். இது கண்டி அணிக்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்தது.

எனினும், மறுபக்கத்தில் சாதுரியமாக ஆடிய அஞ்சலோ மத்தியூஸ் ஆட்டம் இழக்கமால் 25 ஓட்டங்களைப் பெற்றதுடன் லஹிரு மதுஷங்க கடைசிப் பந்துக்கு முந்திய பந்தில் பௌண்ட்ரி அடித்து கண்டி அணி சம்பியனாவதை உறுதிசெய்தார். லஹிரு மதஷங்க 5 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் வீரர் நூர் அஹ்மத் 3 விக்கெட்களையும் பினுர பெர்னாண்டோ, 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

முன்னதாகத் துடுப்பெடுத்தாடிய தம்புள்ளை ஔரா 20 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்பத்தில் தடுமாறிய தம்புள்ளை 5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 32 ஓட்டங்களையும் இரண்டாவது 5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 36 ஓட்டங்களையும் மூன்றாவது 5 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 32 ஓட்டங்களையும் கடைசி 5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 47 ஓட்டங்களையும் பெற்றது.

ஆரம்ப வீரர் அவிஷ்க பெர்னாண்டோ 5, சதீர சமரவிக்ரம 36, குசல் மெண்டிஸ் ஆட்டமிழக்காகமல் 31 , தனஞ்சய டி சில்வா 40 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் சதுரங்க டி சில்வா 2 விக்கெட்களையும் நுவன் ப்ரதீப், மொஹமத் ஹஸ்னய்ன் அகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (ஐ)

# ஆசிய கிண்ண தொடர் இந்திய அணி அறிவிப்பு




புதுடில்லி, ஓக. 22

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணியில் திலக் வர்மாவுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் வரும் 31ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 17ஆம் திகதி வரை பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் நடைபெறுகிறது. இதில், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நேபாளம் ஆகிய 6 அணிகள் பங்கேற்கின்றன.

பாகிஸ்தானில் இந்தத் தொடர் நடக்கிறது. எனினும், பாகிஸ்தான் செல்ல இந்திய அணி மறுத்ததால் இந்திய அணி பங்கேற்கும் போட்டிகள் இலங்கையில் நடக்கின்றன.

இந்திய அணி விவரம் - ரோஹித் சர்மா, ஷுப்மன் கில், விராட் கோலி, ஸ்ரேயாஸ் ஐயர், சூர்யகுமார் யாதவ், திலக் வர்மா, கே. எல். ராகுல் (விக்கெட் காப்பாளர்), இஷான் கிஷன் (விக்கெட் காப்பாளர்), ஹார்திக் பாண்ட்யா, ரவீந்திர ஜடேஜா, ஷர்துல் தாக்கூர், அக்சர் பட்டேல், குல்தீப் யாதவ் , ஜஸ்ப்ரித் பும்ரா, முகமது ஷமி, முகமது சிராஜ், பிரசித் கிருஷ்ணா.

சஞ்சு சாம்சன் மாற்று வீரராக அறிவிக்கப்பட்டுள்ளார்.



# அயர்லாந்துடனான ரி - 20 தொடர் இந்தியா வசம்!

டப்ளின், ஓக. 22

அயர்லாந்து அணிக்கு எதிராக ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரண்டாவது இருபது - 20 போட்டியில் 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது. இதன் மூலம் தொடரை 2-0 என்ற கணக்கில் இந்தியா வென்றுள்ளது.

பும்ரா தலைமையிலான இந்திய அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இருபது - 20 கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. இந்தத் தொடரின் 2ஆவது போட்டி டப்ளினில் நடைபெற்றது.

இதில், நாணயசுழற்சியில் அயர்லாந்து அணி பந்து வீச்சை தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 185 ஓட்டங்களை எடுத்தது. ஜெய்ஸ்வால் மற்றும் ருதுராஜ் கெய்க்வாட் தொடக்க வீரர்களாக விளையாடினர். ஜெய்ஸ்வால் 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த திலக் வர்மா ஓர் ஓட்டத்துடன் வெளியேறினார்.

பின்னர் சஞ்சு சாம்சனும், ருதுராஜ் கெய்க்வாடும் இணைந்து 71 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். சஞ்சு சாம்சன், 26 பந்துகளில் 40 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். கெய்க்வாட், 43 பந்துகளில் 58 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ரிங்கு சிங் மற்றும் ஷிவம் துபே இணைந்து 5ஆவது விக்கெட்டுக்கு 55 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர். ரிங்கு சிங், 21 பந்துகளில் 38 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். துபே 16 பந்துகளில் 22 ஓட்டங்கள் எடுத்தார். இந்திய அணி 185 ஓட்டங்கள் எடுத்து 20 ஓவர்களை நிறைவு செய்தது.

186 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை அயர்லாந்து அணி விரட்டியது. 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து அந்த அணி தடுமாறியது. இருந்தும் தொடக்க ஆட்டக்காரர் ஆண்ட்ரூ போல்பிர்னி நிலையாக ஆடினார்.

கேம்பர் மற்றும் டோக்ரெல்லுடன் 35 ஓட்டங்கள் மற்றும் 52 ஓட்டங்கள் என இணைப்பாட்டம் அமைத்தார் ஆண்ட்ரூ போல்பிர்னி. தனது அதிரடி பேட்டிங் பாணியால் இந்திய அணியின் பந்து வீச்சாளர்களை அச்சுறுத்தினார். 51 பந்துகளில் 72 ஓட்டங்களை எடுத்த அவர், அர்ஷ்தீப் வேகத்தில் ஆட்டமிழந்தார். 5 பௌண்ட்ரி மற்றும் 4 சிக்ஸர்கள் அவரது இன்னிங்க்ஸில் அடங்கும். அவர் ஆட்டமிழந்த போது அந்த அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 123 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 152 ஓட்டங்கள் எடுத்தது அயர்லாந்து. இதன் மூலம் 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது இந்தியா.

# சின்சினாட்டி ஓப்பன் ஜொகோவிச் சம்பியன்



சின்சினாட்டி, ஓக. 22

சின்சினாட்டி ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடைபெற்றது. இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் கார்லஸ் அல்காரஸும் நோவக் ஜொகோவிச்சும் மோதினர்.

இந்தப் போட்டியில் முதல் செற்றை 7-5 என்ற புள்ளி கணக்கில் அல்காரஸ் கைப்பற்றினார். இதன்பின்னர் தனது தீவிர ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜொகோவிச் 7-6 (9-7), 7-6 (7-4) என்ற கணக்கில் அடுத்த இரு செட்களை கைப்பற்றினார்.

இறுதியில் ஜோகோவிச் 5-7, 7-6 (9-7), 7-6 (7-4) என்ற செற் கணக்கில் அல்காரஸை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

# பிரிக்ஸ்:
## டொலருக்கு போட்டியாக பொது நாணயமா? இந்தியா, சீனா நிலைப்பாடு என்ன?

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்க நாடுகள் அடங்கிய பிரிக்ஸ் கூட்டமைப்பின் தலைவர்கள் இன்று ஆகஸ்ட் 22ம் தேதி தென்னாப்பிரிக்காவின் ஜொகன்னஸ்பர்க் நகரில் நடைபெறவுள்ள உச்சி மாநாட்டில் சந்தித்துப் பேசவுள்ளனர். இச்சந்திப்பின் போது, பிரிக்ஸ் அமைப்பில் புதிய உறுப்பு நாடுகளைச் சேர்த்துக் கொள்வதா என்பது குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

இந்த மாநாட்டை நடத்தும் தென்னாப்பிரிக்கா, பிரிக்ஸ் கூட்டமைப்பில் உறுப்பினராகச் சேர மேலும் 40 நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளதாகக் கூறியுள்ளது.

**பிரிக்ஸ் கூட்டமைப்பு எப்படி உருவாக்கப்பட்டது?**

கோல்டுமேன் சாக்ஸ் என்ற முதலீட்டு வங்கியின் பொருளாதார நிபுணர் ஜிம் ஓ நீல், கடந்த 2001-ல் பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் பெயர்களை உள்ளடக்கிய "பிஆர்ஐசி" (BRIC) என்ற சுருக்கத்தை உருவாக்கினார்.

அந்த நேரத்தில் நடுத்தர வருவாயைக் கொண்ட, அதே நேரம் வேகமான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டிருந்த நாடுகள் தான் அவை. இந்த நாடுகள் வரும் 2050ம் ஆண்டு உலகிலேயே அதிக பொருளாதார வளர்ச்சியைக் கொண்ட நாடுகளாக மாறும் என்று அவர் கணித்தார்.

2006ம் ஆண்டு இந்த நான்கு நாடுகளும் இணைந்து "பிரிக்" நாடுகள் என்ற கூட்டமைப்பை உருவாக்கின. அதில் 2010ம் ஆண்டு தென்னாப்பிரிக்காவும் இணைந்து "பிரிக்ஸ்" கூட்டமைப்பு என்ற பெயரை இந்த அமைப்பு பெற்றது.

**பிரிக்ஸ் கூட்டமைப்பு எவ்வளவு முக்கியத்துவம் பெற்றது?**

பிரிக்ஸ் நாடுகள் ஒன்றிணைந்து, 324 கோடி மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. அவர்களுடைய ஒட்டு மொத்த தேசிய வருவாய் 26 ட்ரில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது. இது உலக பொருளாதாரத்தில் 26 சதவிகிதம் ஆகும்.

இருப்பினும், அமெரிக்காவைச் சேர்ந்த அட்லாண்டிக் கவுன்சிலின் கருத்தின்படி, பிரிக்ஸ் நாடுகள் அனைத்தும் இணைந்து ஐக்கிய நாடுகள் அமைப்பின் சர்வதேச நாணய நிதியத்தில் 15 சதவிகித வாக்களிப்பு உரிமையை மட்டுமே கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

**பிரிக்ஸ் கூட்டமைப்பின் நோக்கம் என்ன?**

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களை சீரமைக்கும் நோக்குடன் ஒரு சக்தி வாய்ந்த அமைப்பாக பிரிக்ஸ் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.



நியூ டெவலப்மென்டல் பேங்க் (New Development Bank) என்ற பெயரில் 250 கோடி அமெரிக்க டாலர்கள் முதலீட்டில் பிரிக்ஸ் கூட்டமைப்பு சார்பில் ஒரு வங்கி கடந்த 2014ம் ஆண்டு உருவாக்கப்பட்டு, பிரிக்ஸ் நாடுகளின் அவசரத் தேவைக்கு உதவும் வகையில் செயல்பட்டு வருகிறது.

இருப்பினும், இந்த வங்கியில் பிரிக்ஸ் கூட்டமைப்பில் இல்லாத எகிப்தும், ஐக்கிய அரபு அமீரகமும் இணைந்துகொண்டன.

**பிரிக்ஸ் நாடுகள் தங்களுக்குள் ஒருமித்த நாணயப் புழக்கத்தை உருவாக்குமா?**

பிரேசிலில் உள்ள முக்கிய அரசியல் தலைவர்கள் மற்றும் ரஷ்ய தலைவர்கள் இணைந்து பிரிக்ஸ் கூட்டமைப்புக்காக தனிப்பட்ட நாணயத்தை உருவாக்க முடிவெடுத்துள்ளனர். இதன் மூலம் அமெரிக்க டாலரின் ஆதிக்கத்தைக் குறைக்கவும் இந்நாடுகள் முயற்சிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளன. சர்வதேச நிதி, பொருளாதார, வர்த்தக நடவடிக்கைகளில் டாலரின் செல்வாக்கு குறையும் போது உலக அரசியலில் அமெரிக்காவின் ஆதிக்கமும் குறைந்துவிடும் என்பதில் சந்தேகம் இல்லை.

இருப்பினும், தற்போது தென்னாப்பிரிக்காவில் நடை

Which countries are in Brics?

| Country | Population (millions) | GDP per capita (US $) |
|---|---|---|
| Brazil | 215.3 | 8,900 |
| Russia | 143.6 | 15,345 |
| India | 1,417.2 | 2,388 |
| China | 1,412.2 | 12,720 |
| South Africa | 59.9 | 6,776 |

Source: World Bank, 2022 BBC

பெறவுள்ள மாநாட்டில் இது பற்றிய விவாதம் இடம் பெறாது என ஆசியா மற்றும் பிரிக்ஸ் கூட்டமைப்புக்கான அந்நாட்டின் தூதர் அனில் சூக்லல் தெரிவித்துள்ளார்.

ஆனால், இது போல் பிரிக்ஸ் நாடுகளுக்கான பொது நாணயத்தை அறிமுகப்படுத்துவது கேலிக்குரியது என "பிரிக்" என்ற கோட்பாட்டை உருவாக்கிய கோல்டுமேன் சாக்ஸ் வங்கியின் ஜிம் ஓ நீல் இங்கிலாந்தின் டைம்ஸ் இதழுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

**பிரிக்ஸ் - ஒருமித்த கருத்து என்ன?**

ஒவ்வொரு பிரிக்ஸ் நாடும் ஒரு மிகப்பெரிய நாடாகவே கருதப்படுகிறது என்கிறார் டப்ளினில் உள்ள ட்ரினிட்டி கல்லூரியைச் சேர்ந்த பட்ரைக் கார்மோடி.




"இருப்பினும் அதில் மிகப்பெரிய நாடாக சீனா விளங்குகிறது," என்கிறார் அவர். 'இதன் மூலம் பிரிக்ஸ் கூட்டமைப்பு உலகில் சக்திவாய்ந்த குரலாக தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது என்பது மட்டுமல்ல, உலக அளவில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றும் கருதுகிறது."

ஆனால் ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் இந்தியா, சீனாவின் போட்டி நாடாக விளங்குகிறது. சீனாவுடன் மிக நீண்ட எல்லையை இந்தியா பகிர்ந்து கொண்டிருக்கையில் இருதரப்புக்கும் இடையே நீண்ட கால பிரச்னைகள் இருக்கின்றன.

மேற்குலக நாடுகளுடனான உறவுகளைப் பேணும் விஷயத்திலும் பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளுக்கு இடையே பல முரண்கள் நிலவுகின்றன.

"பிரிக்ஸ் கூட்டமைப்பை மேற்குலக நாடுகளுக்கு எதிரான நிலையில் பயன்படுத்த ரஷ்யா முயல்கிறது. அதன் மூலம் உக்ரேன் நாட்டின் மீது போர் தொடுத்ததற்காக அந்நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை உடைத்தெறிய முயன்றுவருகிறது," என்கிறார் சாத்தம் ஹவுஸ் என்ற லண்டனைச் சேர்ந்த பொருளாதார அமைப்பின் இயக்குனர் க்ரியோன் பட்லர்.

ரஷ்யாவிலிருந்து எண்ணெய் இறக்குமதிக்கு மேற்குலக நாடுகள் தடை விதித்ததால், இந்தியாவும், சீனாவும் ரஷ்யாவின் மிகப் பெரிய வாடிக்கையாளர்களாக மாறி



யுள்ளன.

2023ம் ஆண்டில் சீனா மற்றும் தென்னப்பிரிக்கா நாடுகளுடன் இணைந்து ரஷ்யா கடலில் போர் ஒத்திகை நிகழ்ச்சிகளையும் நடத்தியுள்ளது.

இருப்பினும், பிரிக்ஸ் கூட்டமைப்பில் உள்ள பிற நாடுகள், ரஷ்யாவின் இந்தப் போக்கை ஆதரிக்கவில்லை.

"தென்னாப்பிரிக்கா, பிரேசில் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் உலக நாடுகளுக்குள் பாகுபாடு ஏற்படுவதை விரும்பவில்லை," என்கிறார் பட்லர். "மேற்குலகை எதிர்ப்பது அந்த நாடுகளின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு எதிராக இருக்கும் என அவை கருதுகின்றன."

**பிரிக்ஸ் கூட்டமைப்பில் சேர எந்த நாடுகள் விரும்புகின்றன?**

பிரிக்ஸ் மற்றும் ஆசியாவுக்கான தென்னாப்பிரிக்க தூதர் அனில் சூக்லல் அண்மையில் தெரிவித்த தகவலின் படி, 22 நாடுகள் பிரிக்ஸ் கூட்டமைப்பில் சேர வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும், மேலும் 20க்கும் மேற்பட்ட நாடுகள் ஆர்வம் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.



இதில், ஈரான், அர்ஜெண்டினா, கியூபா, கஜகஸ்தான், எதியோப்பியா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் வெனிசூலா நாடுகளும் அடங்கும்.

"உலகின் அதிகாரத்தை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நகர்த்துவதாகவே இந்நாடுகள் கருதுகின்றன. இதன் மூலம் பிரிக்ஸ் கூட்டமைப்பின் வலிமை அதிகரிக்கும் என்றும் கருதுகின்றன," என்கிறார் பேராசிரியர் கார்மோடி.

"ஆனால், பிரிக்ஸ் கூட்டமைப்பு குறிப்பிட்ட நாடுகளை உள்ளடக்கிய ஒரு குழுவாக இருக்கிறது," என்கிறார் அவர். மேலும், 'புதிய உறுப்பினர்களை ஏற்றுக் கொள்வதன் மூலம் பிரிக்ஸ் கூட்டமைப்பின் உண்மையான நோக்கமும், பலமும் நீர்த்துப் போகும் வாய்ப்பு உள்ளது," என்றும் அவர் கூறுகிறார்.

"என்னுடைய கருத்து என்னவென்றால், சில நாடுகளை பிரிக்ஸ் கூட்டமைப்பு சேர்த்துக்கொள்ளலாம்," என்கிறார் பட்லர், 'ஆனால் அவை, ஈரான் போன்ற பிரச்னைகளில் தத்தளிக்கும் நாடாக இல்லாமல், அர்ஜெண்டினா போன்ற நாடுகளாக இருக்கும்."

**பிரிக்ஸ் மாநாட்டில் எதுபற்றி விவாதிக்கப்படும்?**

2023 பிரிக்ஸ் உச்சிமாநாடு ஜொகன்னஸ்பர்க் நகரில் ஆகஸ்ட் 22 முதல் 24 வரை நடைபெறுகிறது.

இந்த மாநாட்டில் பிரிக்ஸ் கூட்டமைப்பில் யாரெல்லாம் சேரலாம் என்பது குறித்த விதிகளை வகுப்பது முக்கிய விவாதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், பருவநிலை மாற்றம், வர்த்தக விரிவாக்கம், முதலீட்டுக்கான வாய்ப்புகள், வளரும் நாடுகளை நவீனப்படுத்துவது உள்ளிட்ட விஷயங்கள் விவாதிக்கப்படலாம்.

இம்மாநாட்டில் பங்கேற்க ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, ஆசியா மற்றும் கரீபிய பிராந்தியங்களில் இருந்து 60க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தென்னாப்பிரிக்கா அழைப்பு விடுத்துள்ளது.

ரஷ்ய அதிபர் புடின், இந்த மாநாட்டில் பங்கேற்க மாட்டார். போர்க்குற்றங்கள் காரணமாக அவரைக் கைது செய்ய சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஒரு பிடியாணை பிறப்பித்துள்ள நிலையில், அவர் தென்னப்பிரிக்காவுக்குப் பயணம் செய்ய மாட்டார் என தெரியவந்துள்ளது. மேலும், தன்மீதான போர்க் குற்றச்சாட்டையும் அவர் மறுத்துள்ளார்.

சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவை அமல்படுத்தும் நாடுகளில் ஒன்றாக தென்னாப்பிரிக்கா உள்ள நிலையில், அவர் அங்கு சென்றால் அது அரசியல் ரீதியாக சிக்கலை ஏற்படுத்தும் என்றும் கருதப்படுகிறது.

இதனால், ரஷ்யாவில் இருந்துகொண்டே இணையம் மூலம் இந்த மாநாட்டில் பங்கேற்கப் போவதாக புடின் அறிவித்துள்ளார் என ரஷ்யாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கீ லாவ்ரோவ் கூறியுள்ளார்.

# மீண்டும் கச்சதீவு மீட்பு சர்ச்சை

தி. இராமகிருஷ்ணன்

இலங்கையிடமிருந்து கச்சதீவை மீளப்பெறவேண்டும் என்ற கோரிக்கையை கடந்த வெள்ளிக்கிழமை மீளவலியுறுத்தியதன் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அந்த தீவு தொடர்பான விவாதத்தை மீண்டும் மூளவைத்திருக்கிறார். அவரைப் பொறுத்தவரை, இராமேஸ்வரத்தில் இருந்து 14 கடல் மைல்கள் தொலைவில் அமைந்திருக்கும் மக்கள் வசிக்காத 285 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட தரிசு தீவை மீட்டெடுப்பதே தமிழ்நாட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு முடிவைக்கட்டும்.

இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் பிரதமர் நரேந்திர மோடிக்கு தான் எழுதிய கடிதங்களைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்டாலும், மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு அவசியமான படகுகளும் மீன்பிடி வலைகளும் திருப்பித்தரப்படவில்லை என்று இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம் பகுதியில் மீனவர்கள் மகாநாடொன்றில் உரையாற்றிய ஸ்டாலின் கூறினார்.

இந்த பிரச்சினையை ஸ்டாலின் கிளப்பியிருப்பது இது முதற்தடவையல்ல. அவருக்கு முன்னர் மாநில முதலமைச்சர்களாக இருந்தவர்களும் இதை பல தடவைகள் கிளப்பினார்கள். கடந்த மாதம் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதடில்லிக்கு விஜயம் செய்வதற்கு முன்னதாகவும் அவருடன் இந்த பிரச்சினை குறித்து பேசுமாறு பிரதமர் மோடியிடம் ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

### இலங்கையின் ஒரு பகுதியாக கச்சதீவு எப்போது வந்தது?

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாக்குநீரி ண கடற்பரப்பில் எல்லையை பிரிப்பதற்கு 1974 ஜூனில் பிரதமர்கள் இந்திரா காந்தியும் சிறிமா பண்டாரநாயக்கவும் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டனர்.

வரலாற்று சான்றுகளுக்கும் சட்டரீதியான சர்வதேச கோட்பாடுகள் மற்றும் முன்னுதாரணங்களுக்கு இசைவான முறையில் எல்லையொன்று வரையறுக்கப்பட்டிருக்கிறது என்று 1974 ஜூன் 28 வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் கூறப்பட்டிருந்தது. அந்த எல்லை கச்சதீவின் மேற்கு கரையோரத்துக்கு அப்பால் வருகிறது என்றும் அதில் குறிபிடப்பட்டது.

இரு பிரதமர்களும் செய்துகொண்ட உடன்படிக்கை இரு நாடுகளுக்கும் இடையில் 1921 முதல் நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளை ஒரு முடிவுக்கு கொண்டுவந்தது. தொடக்கத்தில் அன்றைய மட்ராஸ் அரசாங்கத்துக்கும் இலங்கைக்கும் இடையிலேயே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

### மீனவர்களுக்கு கச்சதீவு எந்தளவுக்கு முக்கியமானது?

இரு நாடுகளினதும் மீனவர்கள் மீன்பிடிக்காக பாரம்பரியமாக கச்சதீவை பயன்படுத்திவந்தனர். இந்த அம்சம் 1974 உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதிலும், 1976 மார்ச்சில் செய்துகொள்ளப்பட்ட துணை உடன்படிக்கை இலங்கையின் அல்லது இந்தியாவின் வெளிப்படையான அனுமதியின்றி இரு நாடுகளில் எந்தவொரு நாட்டினதும் வரலாற்று ரீதியான கடற்பரப்பிலும் பிரத்தியேக வலயத்தில் அல்லது பிரத்தியேக பொருளாதார வலயத்தில் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடலாகாது என்று தெளிவாகக் குறிப்பிட்டது.

அந்த தீவில் உள்ள புனித அந்தோனியார் ஆலயம் வருடாந்தம் பெப்ரவரியில் அல்லது மார்ச்சில் நடத்தும் திருவிழாவில் இரு நாடுகளையும் சேர்ந்த அடியார்கள் கலந்துகொள்வார்கள். இந்த பாரம்பரியம் தொடருகிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது?

1505 -- 1658 காலகட்டத்தில் கச்சதீவை ஆக்கிரமித்திருந்த போர்த்துக்கீசர்கள் அதன் மீது நியாயாதிக்கத்தைச் செலுத்தினார்கள் என்ற அடிப்படையில் தீவு மீது இலங்கை சுயாதிபத்தியத்தைக் கோரியது. இராமநாதபுரத்தின் முன்னாள் ராஜா தனது ஜமீனின் ஒரு பகுதியாக கச்சதீவைக் கொண்டிருந்தார் என்பது இந்தியாவின் நிலைப்பாடாக இருந்தது.

முன்னாள் ராஜா இராமநாத சேதுபதியுடனான பேட்டியொன்றை அடிப்படையாகக் கொண்டு 1968 மார்ச் 6 "த இந்து" வெளியிட்ட செய்தியொன்றில் கச்சதீவு நினைவுக்கு எட்டாத காலத்தில் இருந்து ஜமீனின் நியாயாதிக்கத்தின் கீழ் இருந்து வந்தது என்றும் அதன் கடைசி எல்லையாக இராமநாதபுரம் எஸ்டேட் இருந்தது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஜமீந்தார் முறை ஒழிப்புச்சட்டத்தை தொடர்ந்து மாநில அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட 1949 ஆம் ஆண்டுவரை ஜமீன் வரிகளை அறவிட்டுவந்தது என்றும் ராஜா அதில் கூறியிருந்தார்.

ஆனால், 1974 ஜூலையில் லோக்சபாவில் இந்த விவகாரம் தொடர்பிலான விவாதத்துக்கு பதிலளித்த அன்றைய வெளியுறவு அமைச்சர் சுவரண் சிங், கச்சதீவு தொடர்பான வரலாற்று பதிவுகளை விரிவாக ஆராய்ந்த பின்னரே அதன் மீதான இலங்கையின் சுயாதிபத்தியத்தை அங்கீகரிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று கூறினார்.

### 1974 உடன்டிக்கை தொடர்பிலான பிரதிபலிப்புகள் ?

கச்சதீவை மீட்கவேண்டும் என்ற தற்போதைய கோரிக்கை 1974 ஆம் ஆண்டில் உடன்படிக்கைக்கு கிளம்பிய எதிர்ப்பில் அதன் தோற்றுவாயைக் கொண்டிருக்கிறது.

பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் 1974 ஜூலையில் இடம்பெற்ற விவாதங்களின்போது திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஜனசங், சுவதந்திரா மற்றும் சோசலிஸ்ட் கட்சி உட்பட பெரும்பாலான எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச்செய்தன.





அன்று ஜனசங்கின் தலைவராக இருந்த அடல் பிஹாரி வாஜ்பாய் கச்சதீவைக் கைமாற்றும் தீர்மானம் மக்களுக்கும் பாராளுமன்றத்துக்கும் தெரியாமலேயே எடுக்கப்பட்டது என்று கூறினார். அவரை பழம்பெரும் சோசலிஸ்ட் தலைவர் மது லிமாயே ஆதரித்தார்.

அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி 1973 ஆம் ஆண்டில் கச்சதீவை கைமாற்றுவதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருந்தவேளையிலேயே "தமிழ்நாட்டுக்கு மாத்திரமல்ல முழு இந்தியாவுக்கும் சொந்தமான அந்த தீவை தொடர்ந்தும் இந்தியா வசம் இருப்பதையே மக்கள் விரும்புகிறார்கள் என்று பிரதமர் இந்திரா காந்தியிடம் கூறியதாக 1973 அக்டோபர் 17 'த இந்து" செய்தி வெளியிட்டது.

மூன்று மாதங்கள் கழித்தும் அதே நிலைப்பாட்டை வலியுறுத்தி இந்திரா காந்திக்கு கருணாநிதி கடிதம் ஒன்றை எழுதினார். 1974 உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பிறகு அந்த கடிதத்தின் பிரதியொன்று வெளியிடப்பட்டது.

அப்போது புதிய கட்சியாக இருந்த அண்ணா தி.மு.க.வின் தாபக தலைவரான எம். ஜி. இராமச்சந்திரன் கச்சதீவு விவகாரத்தில் மத்திய அரசாங்கத்துக்கு உகந்தமுறையில் வழிகாட்டத்தவறியதாக கருணாநிதி மீது குற்றஞ்சாட்டி அவரை முதலமைச்சர் பதவியில் இருந்து விலகுமாறு கோரினார்.




### எப்போது கச்சதீவு விவகாரம் மீண்டும் கிளம்பியது?

சுமார் 15 வருடங்கள் அமைதியாக இருந்த பிறகு 1991 ஆகஸ்டில் இந்திய சுதந்திர தினத்தன்று ஆற்றிய உரையில் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா கச்சதீவை மீட்கவேண்டும் என்ற கோரிக்கையை புதுப்பித்தார். பிறகு அவர் தனது கோரிக்கையை கச்சதீவை நீண்டகாலத்துக்கு குத்தகைக்கு எடுக்கவேண்டும் என்று மாற்றிக் கொண்டார்.

இந்த விவகாரம் தொடர்பில் தமிழ்நாடு சட்டசபை பல விவாதங்களைக் கண்டது. கடந்த 15 வருடங்களில் ஜெயலலிதாவும் கருணாநிதியும் இந்த விவகாரத்தில் உச்சநீதிமன்றத்தை நாடினார்கள்.

### இந்திய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

இந்தியாவுக்கு சொந்தமான எந்த பிராந்தியமும் கைமாற்றப்படவில்லை என்பதால் இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்பது என்ற பிரச்சினை எழவில்லை என்று 2013 ஆகஸ்ட் மத்திய அரசாங்கம் உச்சநீதிமன்றத்தில் கூறியது. கச்சதீவு பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் (இப்போது சிறிலங்கா) இடையிலான ஒரு தகராறு. இணங்கிக் கொள்ளப்பட்ட எல்லையொன்று இருக்கவில்லை. அந்த எல்லைப் பிரச்சினையும் 1974, 1976 உடன்படிக்கைகளின் மூலமாக தீர்க்கப்பட்டுவிட்டது என்றும் மத்திய அரசாங்கம் கூறியது.

இரு உடன்படிக்கைகள் பற்றியும் ராஜ்ய சபாவில் 2022 டிசம்பரில் குறிப்பிட்ட வேளையில் மத்திய அரசாங்கம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சர்வதேச கடல் எல்லையின் இலங்கைப் பக்கமாகவே கச்சதீவு இருக்கிறது என்றும் இந்த விவகாரம் உச்சநீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்ததால் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படக்கூடியது அல்ல என்றும் கூறியது.

(த இந்து, 19 ஆகஸ்ட்2023)

# எதிர்பார்த்த வருமானத்தை ஈட்டமுடியாத நிலையில் மூன்று அரச திணைக்களங்கள்

*கொழும்பு, ஓக. 22*

*உள்நாட்டு இறைவரித் திணைக்களம் உட்பட அரசுக்கான வருமானத்தை சேகரிக்கும் மூன்று திணைக்களங்களின் 2023 வருடத்திற்கான வருமான இலக்கு பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.*

*2023 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி வரையில் எதிர்பார்த்த வரி வருமானம் தொடர்பாக பாராளுமன்ற கண்காணிப்பு தெரிவுக்குழுவில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை மூலம் இந்த தகவல் தெரியவந்துள்ளது.*

*உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 2023 ஆம் ஆண்டில் ஆயிரத்து 667 பிலிலியன் ரூபாவை வரி வருமானமாக ஈட்டலாம் என மதிப்பீடு செய்திருந்தது.*

*ஜனவரி மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி வரையான 8 மாத காலத்தில் 797 பில்லியன் ரூபாவே வருமானமாக கிடைத்துள்ளது.*

*இது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் சுமார் 48 வீதமாகும். இந்த நிலையில், அடுத்த மூன்று மாதங்கள் என்ற குறுகிய காலத்தில் மீதமுள்ள 52 வீத வருமானத்தை ஈட்ட முடியாது எனக் கூறப்படுகிறது.*

*இதனை தவிர இலங்கை சுங்க திணைக்களம் ஜனவரி மாதம் முதல் ஓகஸ்ட் 14 ஆம் திகதி வரையில் 495 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியிருந்தது.*

*2023 ஆம் ஆண்டில் ஆயிரத்து 127 பில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டலாம் என சுங்க திணைக்களம் மதிப்பீடு செய்திருந்ததுடன் 8 மாத காலத்தில் 41 வீதத்திற்கும் குறைவான வருமானமே ஈட்டப்பட்டுள்ளது.*

*அதேபோல் இலங்கை மதுவரி திணைக்களம் கடந்த 8 மாத காலத்தில் 99 பில்லியன் ரூபாவை வருமானமாக பெற்றுள்ளது. 2023 ஆம் ஆண்டில் 217 பில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டலாம் என மதுவரி திணைக்களம் மதிப்பீடு செய்திருந்தது.*

*எனினும் 8 மாத காலத்தில் 46 வீத வருமானமே கிடைத்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் இந்த மூன்று திணைக்களங் கள் மூலம் 3 ஆயிரத்து 101 பில்லியன் வருமா னத்தை ஈட்டலாம் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.*

*எனினும் 8 மாத காலத்தில் குறித்த திணைக்கள் ஊடாக 45 வீத வருமானத்தை கூட நெருங்க முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)*

# எமதணியில் இருப்பவர்கள் மீண்டும் ராஜபக்ஷவினருடன் சேரமாட்டார்கள்

## உறுதியாகக் கூறுகிறார் நிமல் லான்சா

*கொழும்பு, ஓக. 22*

*தனது அரசியல் நடவடிக்கைகள் மற்றும் பொதுஜன பெரமுனவின் அரசியல் விவகாரங்கள் பற்றி பேசும் உதயங்க வீரதுங்க, பொதுஜன பெரமுனவில் இருக்கும் பச்சிளம் பாத்திரம் எனவும் இதனால், அவருக்கு பதிலளிப்பதில் பயனில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.*

*சமூக ஊடகங்கள் வாயிலாக புதிய அரசியல் கூட்டணி சம்பந்தமாக உதயங்க வீரதுங்க வெளியிட்டு வரும் கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனை கூறியுள்ளார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*பசில் ராஜபக்ஷ, நான் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவை ஆரம்பிக்கும் போது உதயங்க வீரதுங்க, மிக் விமான மோசடியில் சிக்கி இலங்கைக்குள் வர முடியாமல் வெளிநாட்டில் இருந்தார். ராஜபக்ஷ என்ற பெயருடன் உறவு இருப்பதால் மாத்திரம் கட்சியை பற்றி பேச முடியாது.*

*பொதுஜன பெரமுனவை பற்றி பேசுவதற்கு அவர் மிகவும் இளையவர். அந்த கட்சியை ஆரம்பிக்கும் போது அவர் எங்கிருக்கின்றார் என்பது தெரியாமல் இருந்தது.*

*போக்கிடம் இல்லாது மறைந்து இருந்து, கோட்டாபயவின் புண்ணியத்தில் மீண்டும் இலங்கைக்குள் வந்த நபர், புதிய அரசியல் கூட்டணியை பற்றி பேசுகிறார். இப்படியான திருடர்கள் காரணமாகவே ராஜபக்ஷவினரின் அரசியல் இல்லாமல் போனது. - என்றார். (அ)*

# விடுமுறையில் வீடு வந்து கூலிக்கு கொலை செய்த கடற்படை சிப்பாய்!

*கொழும்பு, ஓக., 22*

*தங்காலை குடாவெல்ல பகுதியில் ஆழ்கடல் மீன்பிடிப் படகு ஆழ்கடல் நீச்சல் வீரரான நிமேஷ் ரங்க சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவமானது, போதைப் பொருள் கடத்தல் கும்பல் ஒன்றின் ஒப்பந்தந்துக்கு அமைய நடைபெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.*

*அதன்படி குறித்த கொலையின்போது துப்பாக்கிதாரியாக செயற்பட்ட கடற்படை சிப்பாய் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

*புல்மோட்டை ரன்வலி கடற்படை முகாமில் சேவையாற்றும் பலபிட்டிய பகுதியைச் சேர்ந்த இந்த கடற்படை சிப்பாய், விடுமுறையில் வீட்டுக்கு வந்திருந்த போது மேலதிக வேலையாக கூலிக்கு இந்தக் கொலையை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*இதுவரையிலான விசாரணைகளில், வெளிநாட்டில் உள்ள போதைப் பொருள் கடத்தல்காரர் ஒருவரின் தேவைக்காக இக்கொலை நடந்துள்ளதாக தெரியவந்துள்ளது.*

*தென்னிலங்கையின் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரராக கருதப்படும் ரத்கம விதுர என்பவரின் நெருங்கிய சகாவான தில்ஷான் என்பவர் ஊடாக இந்தக் கொலை ஒப்பந்தம் கொடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.*

*கொலைக்கு பயன்படுத்தப்பட்டுள்ள ரி 56 ரக துப்பாக்கி, கொலை நடந்த கடந்த 15 ஆம் திகதிக்கு முன்னர் கடற்படை வீரருக்கு கையளிக்கப்பட்டுள்ளது.*

*பின்னர் கார் ஒன்றில் பலப்பிட்டியவிலிருந்து தங்காலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ள துப்பாக்கிதாரியான கடற்படை சிப்பாய், அங்கிருந்து மோட்டார் சைக்கிளில் கொலை நடந்த இடத்தை அடைந்துள்ளதுடன் அதற்காக முச்சக்கர வண்டி ஒன்று வழிகாட்டியாக செயற்பட்டுள்ளது.*

*அந்த முச்சக்கர வண்டியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.*

*கொலையின் பின்னர் ஒப்பந்தம் கொடுத்த தில்ஷான் என்பவர் மீண்டும் துப்பாக்கிதாரியை தொடர்புகொண்டு பலப்பிட்டி பகுதியில் மின் கம்பம் ஒன்றின் அருகே துப்பாக்கியை வைத்துவிட்டு செல்ல ஆலோசனை வழங்கியதாகவும் அதன்படி கொலைக்கு பயன்படுத்திய துப்பாக்கியை அவ்விடத்தில் வைத்துவிட்டு சென்றதாக கைது செய்யப்பட்டுள்ள கடற்படை சிப்பாய் பொலிஸாரிடம் குறிப்பிட்டுள்ளார்.*

*கொலைக்காக பேசப்பட்ட கூலி இன்னும் தனக்கு கிடைக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*தென் கடல் ஊடாக நாட்டுக்குள் கடத்தப்படும் போதைப் பொருள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்குவதாக சந்தேகித்து கடந்த 15 ஆம் திகதி ஆழ்கடல் நீச்சல் வீரரான நிமேஷ் ரங்க கொலைச் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் நம்புகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)*

